Registered as a Newspaper

# உதயன்

புதன்பொய்கை

சுடர் : 40
கதிர் : 365

புதன்கிழமை
26 நவம்பர் 2025

கார்த்திகை 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50



## தலைவர் பிரபாகரன் பிறந்ததினம் இன்று!

தாயகத்தில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 26
தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளைபிரபாகரனின் 71ஆவதுபிறந்தநாள்தாயகத்திலும் புலத்திலும் இன்று கொண்டாடப்படவுள்ளது. 15

வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த

# காற்றழுத்தம் புயலாகின்றது

- காற்றுச் சுழற்சிகள் ஒன்றிணைந்தன
- 350 மில்லிமீற்றர் மழைக்கு வாய்ப்பு
- தீவிர வெள்ள அபாயத்தில் வடக்கு



யாழ்ப்பாணம், நவம்பர் 26

இலங்கைக்கு தென்கிழக்கு திசையிலும் தென்மேற்கு திசையிலும்நிலவியகாற்றுச் சுழற்சிகள் ஒருங்கிணைந்து காற்றழுத்தத் தாழ்வு நிலையாக மாற்றம் பெற்றுள்ளன. இவை நாளை ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுநிலையாகவும், நாளைமறுதினம் புயலாகவும் மாற்றம் பெறும் – இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறையின் மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராசா தெரிவித்துள்ளார். 15

## மாவீரர் எழுச்சிப் பாடல்: பாய்கின்றது வழக்கு!

யாழ்ப்பாணம், நவ. 26
மல்லாகம்சந்திப்பகுதியில்மாவீரர்தினத்தைமுன்னிட்டுஎழுச்சிப் பாடல்களைஒலிக்கச்செய்தவர்களுக்குஎதிராகவழக்குத்தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனுமதி எதுவும் இல்லாமல்மாவீரர்கீதங்களைசிலர்ஒலிக்கச்செய் 15

## மாசிச்சம்பலுக்குள் போதை: மாட்டினர் 3 இளைஞர்கள்

யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்ப்பாணம்நகரப்பகுதியில், போதைமாத்திரைகளுடன்மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் 15

## முதியவர் ஒருவர் அடித்துக் கொலை

மருமகன் வெறிச்செயல்
கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, நவ. 26
கிளிநொச்சி அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், மருமகனின் தாக்குதலுக்கு உள்ளான மாமனார் உயிரிழந்துள்ளார். கதிரவேலு சிவராசசிங்கம் (வயது 59) என்பவரேஇவ்வாறுஉயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவரின் மகளுக்கும், மருமகனுக்கும் (சந்தேகநபர்) இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. 15

## ஹெரோய்னுடன் இருவர்கைது!



யாழ்ப்பாணம், நவ. 26
யாழ்ப்பாணம்நகரப்பகுதியில் ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டுஇளைஞர்கள் கைது செய்யப் 15

## கரணவாய் இளைஞர் படுகொலை: இரு சந்தேகநபர்கள் கைதாகினர்!

அவர்களிடம் இருந்து போதைப்பொருள்களும் மீட்பு
வெளிநாட்டுக்குச் செல்லவிருந்த நிலையில் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ. 26
வடமராட்சி கரணவாய் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர்படுகொலைசெய்யப்பட்டசம்பவத்துடன்தொடர்புடையபிரதானசந்தேகநபர்கள் 15

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## அசாதாரண காலநிலை 560 பேருக்கு பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவ. 26
வடமாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக, 171 குடும்பங்களைச் சேர்ந்த 560 பேர்பாதிக்கப்பட்டுள்ளனர்என்றுயாழ்ப்பாணம்மாவட்ட இடர்முகாமைத்துவபிரிவின்பிரதிப்பணிப்பாளர்ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: 15



முச்சந்தி முராரி

பொங்கிடும்
கடற்கரையோரத்திலே
மழை பொழிந்திடும்
கார்த்திகை
மாதத்திலே மங்கலம்
தங்கிடும் நேரத்திலே
எம் மன்னவன்
பிறந்தான் ஈழத்திலே

## உதயனில் நாளை குருதிக்கொடை!

யாழ்ப்பாணம், நவ. 26
உதயனின் 41ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு, உதயன் பணிமனையில் நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை குருதிக்கொடைமுகாம் இடம்பெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் இந்தக் குருதிக்கொடை முகாமில் கலந்துகொள்ள முடியும். (ம–26)

டிசெம்பர் 12 ஆம் திகதி

## இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடத் திட்டம்!

கொழும்பு, நவ. 26
அரசாங்கத்தின்கல்விக்கொள்கைக்குஎதிர்ப்புத்தெரிவித்துப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்களுடன் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்னெடுத்த 15

## காதலன் வீட்டில் கன்னமிட்ட கிளிநொச்சிக் காதலி கைது!

யாழ்ப்பாணம், நவ. 26
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், காதலனின் வீட்டில் நகை திருடிய குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த யுவதியொருவர் சாவகச்சேரி குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
சாவகச்சேரியைச் சேர்ந்த இளைஞரும், கிளிநொச்சிச்சேர்ந்தயுவதி 15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4266 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 34 40 75 77 |
| விசேட எழுத்து | B |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1333 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 14 24 42 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0292 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 3 6 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2372 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 37 54 66 78 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6024 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 3 4 0 3 6 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2051 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 01 15 34 53 |
| விசேட எழுத்து | C |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0599 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 0 3 6 3 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0140 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 14 48 61 |

# பிரிவினையைத் தூண்டுகின்ற செயற்பாடுகளை நிறுத்துங்கள்

## கனேடியத் தூதுவரிடம் வலியுறுத்திய விஜித

**கொழும்பு, நவ.26**

**புலிகளின் சின்னத்தை அங்கீகரித்தல், பிரிவினைவாத சிந்தனைகளை ஊக்குவித்தல் என்பன உள்ளடங்கலாக இலங்கையில் பிரிவினையைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளைக் கனேடிய அரசாங்கம் தடுக்கவேண்டும் என அந்த நாட்டு தூதுவரிடம், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கைக்கான கனடாத் தூதுவராகப் பதவியேற்றுள்ள இஸபெல் கத்ரின் மார்டின், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர், கனடாவில் வாழும் தரப்பினரின் இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு விரோதமானவையாக உள்ளன என்பதைக் கனடாத் தூதுவரிடம் சுட்டிக்காட்டினேன்.

அதற்குப் பதிலளித்த இலங்கைக்கான கனடாத் தூதுவர், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் கனடாவில் தடைசெய்யப்பட்டதொரு அமைப்பாகவே இருக்கின்றது. அதேபோன்று விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய சின்னங்களையோ அல்லது பிரிவினைவாத சிந்தனைகளையோ கனேடிய மத்திய அரசாங்கம் ஒருபோதும் அங்கீகரிக்காது. இலங்கையின் இறையாண்மை மற்றும் கௌவரம் என்பவற்றுக்கு மதிப்பளிப்பதற்கு கனடா உறுதிபூண்டிருக்கின்றது என்று பதிலளித்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0732 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 3 9 5 8 4 2 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2998 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 02 03 19 74 |


| சனிதா | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 04 19 47 69 |
| வெற்றி வாரம் | 5159 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0828 |
| வெற்றி இலக்கம் | 24 41 42 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| விருச்சிகம் | |
| வெற்றி இலக்கம் | 23 50 51 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4710 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கம் | 17 21 58 71 |
| வெற்றி வாரம் | 2174 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 25.11.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 01 17 50 70 |
| வெற்றி வாரம் | 2824 |



### வவுனியாவில்

# சிங்கர் காட்சியறை தீப்பரவலால் நாசம்

வவுனியா, நவ.26

வவுனியா கொறவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள சிங்கர் காட்சியறையில் நேற்றுக் காலை திடீர்த் தீ விபத்து ஏற்பட்ட நிலையில் காட்சியறை முற்றாக எரிந்துள்ளது.

குறித்த காட்சியறையின் மேற்தளத்தில் திடீர்த் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

அதனை அணைக்க ஊழியர்கள் முயற்சி மேற்கொண்டபோதும் தீ அனைத்து இடங்களிலும் பரவி காட்சியறை முழுவதும் தீக்கிரையானது.

சம்பவம் தொடர்பாக வவுனியா மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவின் ஊழியர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் இணைந்து கடும் பிரயத்தனத்தின் மத்தியில் தீயை அணைத்தனர்.

இதன்போது சிங்கர் காட்சியறைக்கு அருகாமையில் இருந்த ஏனைய வியாபார நிலையங்களுக்கும் தீ பரவமுற்பட்ட நிலையில் கடும் முயசிக்கு மத்தியில் தடுக்கப்பட்டது. இதில் சிங்கர் காட்சியறையில் இருந்த பல கோடி ரூபா பெறுமதியான இலத்திரனியல் பொருள்கள் மற்றும் ஆவணங்கள் தீயில் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில் வவுனியா பொலிஸார் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-110)

### நினைவேந்தல்களின்போது

# பொலிஸாரின் கெடுபிடிகள் யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

மாவீரர் வாரம் நடைபெற்றுவரும் நிலையில் பொலிஸாரின் சில கெடுபிடிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளன.

வல்வெட்டித்துறை பகுதியில் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் சோடனையில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலரின் சிவில் உடை படங்களுடன் வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட பதாகையை நேற்றுக் காலை அகற்ற சொன்ன வல்வெட்டித்துறை பொலிஸார், அது தொடர்பில் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். குறித்த பதாகையில் உள்ள பாதணி விடுதலைப் புலிகளை உருவகப்படுத்துவதாக சுட்டிக்காட்டியே பொலிஸார் சிலரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை மல்லாகம் சந்தி பகுதியில் மாவீரர் நினைவேந்தல் தொடர்பில் இலத்திரனியல் உபகரணத்தில் பாடல் ஒலிக்க விடப்பட்டுள்ளது. அவ்விடத்துக்குச் சென்ற தெல்லிப்பழை பொலிஸார் குறித்த உபகரணத்தை கைப்பற்றிச் சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-26)

# பால்நிலை வன்முறை தடுப்பு யாழ்ப்பாணத்தில் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ். சமூகச் செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்டச் செயலர் அலுவலகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

'அனைத்துப் பெண்கள் மற்றும் சிறுமிகளை இணைய வழி வன்முறைகளிலிருந்து இன்றே பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்களை வழங்கும் நிகழ்வுடன் இந்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.



நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, பெண்கள் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் திருமதி கி. தயாபரி மற்றும் யாழ். சமூகச் செயற்பாட்டு மைய நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாத ஆக்கிரமிப்புகளை அரசு உடன் நிறுத்தவேண்டும்

## வலி.கிழக்குப் பிரதேசசபையில் தீர்மானம்
## தேசிய மக்கள் சக்தி வெளிநடப்பு

**யாழ்ப்பாணம்,நவ.26**

**திருகோணமலை புத்தர் சிலை மற்றும் தமிழர் தாயகத்தின் இனவிகிதாசாரத்தையும் வரலாற்றுத்தொன்மையையும் மாற்றியமைக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்புகளை அரசு உடன் நிறுத்தவேண்டும் என்ற தீர்மானம் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நடைபெற்றது. இதன்போது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நீதியை வழங்குவதாகத் தெரிவிக்கின்றபோதும் சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்குக் கட்டுப்பட்டதாகவும் ஒத்தோடுவதாகவுமே உள்ளது. அதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் எனத் தவிசாளரினால் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்குத் தாம் ஒருபோதும் ஆதரவு அளிக்க முடியாது எனத் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கூட்டாக தவிசாளருடன் வாதிட்டனர். "இந்தச் சபை அபிவிருத்திக்கான அலகு. ஆகவே வலிகாமம் கிழக்குக்கு உட்பட்ட அபிவிருத்தி விடயங்களைப் பார்க்கவேண்டிய சபை எதற்காக இங்கே புத்தர் சிலை பற்றி விவாதிக்கின்றது?", என்றும் தேசிய மக்கள் சக்தியினர் குறிப்பிட்டனர். அத்துடன் இந்தப் பிரேரணையைஏற்றுக்கொள்ள முடியாது எனக்கூறி தேசிய மக்கள் சக்தியினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இந்தநிலையில் தேசிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய கட்சிகள் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்த நிலையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ச-இ)

## இடி வீழ்ந்து வீடு சேதம்!

யாழ்ப்பாணம், நவ.26

சாவகச்சேரி நகரப்பகுதியிலுள்ள வீடொன்றின் மீது இடிவீழ்ந்ததில் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. வீட்டிலிருந்த ஐந்து பேரும் எவ்வித பாதிப்புமின்றி தப்பியுள்ளனர். (ச-9)





## மரம் வீழ்ந்ததில் ஓட்டோ சேதம்! சாரதி படுகாயம்

முல்லைத்தீவு,நவ.26

முல்லைத்தீவு தேவிபுரம் முதன்மை வீதியில் பயணித்துக்கொண்டிருந்த முச்சக்கரவண்டி மீது வீதி ஓரமாக நின்ற மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் முச்சக்கரவண்டி சேதமடைந்துள்ளதுடன் சாரதி படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. (ச-19)

## பருத்தித்துறை பிரதேசசபை பாதீடு நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், நவ.26

பருத்தித்துறை பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபையின் அமர்வு தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமான அஞ்சலியும் செலுத்தப்பட்டது. (ச-27)

நேற்றுமுன்தினம் வெளியான உதயனில், 'இப்படியும் உருட்டலாம்' என்ற தலையங்கத்துடன் எழுதப்பட்ட கட்டுரையை வாசித்து பெருமகிழ்ச்சியடைந்தேன். பழைய பூங்காவில் வெட்டிச் சாய்க்கப்படவிருக்கும் பெரு மரங்களுக்காக நீங்கள் குரல் கொடுத்துள்ளீர்கள்.

மரங்களை நட்டவர்களைப் போற்றுவதும் பாதுகாப்பதும் தமிழ் மக்களுடைய பண்பு. சென்ற மாதம் யாழ்.போதனா மருத்துவனை, யாழ்ப்பாணத் தெருக்களில் மரங்களை நாட்டிப் பராமரித்த அரசாங்க அதிபர் ஆக்லன்ட் டைக் அவர்களை நினைவுகூர்ந்து விழா எடுத்தது. இந்த நிலையில் இன்று பழைய பூங்காவில் மரங்களை வெட்டி வீழ்த்துவது, அவருக்கு செய்யப்படும் பெரும் துரோகம் ஆகும். உதயன் பத்திரிகையில் பட்சி, பழைய பூங்காவில் கட்டப்பட இருக்கும் உள்ளக விளையாட்டரங்கு அமைக்கக்கூடாது என்பதற்கு தர்க்க ரீதியான கருத்துக்களை வெளியிட்டுள்ளது. பருவத்தால் நீண்டு உயர்ந்த மரங்களுக்கெல்லாம் குரல் கொடுக்க முடியாது. ஆனால் அவைகளுக்காகப் போராட பட்சி இருப்பதைக் கண்டு பூரிப்படைந்தேன்.

மண்டைதீவுக்கொரு நியாயம் பழைய பூங்காவிற்கு ஒரு நியாயம். தர்க்க ரீதியாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. பட்சி போன்ற ஆர்வலர்களும் பசுமை இயக்கப் பேராளர்களும் யாழ். நகர் மக்களின் நன்றிக்குரியவர்கள்.

அவர்களின் முயற்சி வெற்றியடைய வேண்டும் என்றும், பருவத்தால் ஓங்கி உயர்ந்த மரங்களெல்லாம் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி.எஸ். ஜெபநேசன்**
**முன்னாள் பேராயர்.**




## கடைாக்காரருக்கு கண் திறக்குமோ?

கையில வெண்ணெயை வைச்சுக்கொண்டு ஊரெல்லாம் நெய்க்கு அலையிறதே எங்கட ஆக்களுக்குப் பழக்கமாப் போட்டுது. அப்பிடி இஞ்ச ஒரு பொருள் இருக்கத்தக்கனையா வெளி இடத்தில அதே பொருளைத் தேடுறதால அவையளுக்குச் சில பல லாபங்கள் இருக்கு. உள்ளூரில வாங்கினா அது என்ன விலை,எப்பிடியான தரம் எண்டதை எல்லாரும் அறிஞ்சு போடுவினம். ஆனால் வெளியிடம் எண்டால், அப்பிடி அறிய ஏலாது. அதால இவையளே ஒரு விலையைச் சொல்லி, அதில தங்களுக்கும் சுருட்டமுடியும். இந்த வசதிக்காகத்தான் உள்ளூர்ச் சாமான்களை தரமில்லாதது எண்டு ஏதேதோ சொல்லிக் கழிச்சுப்போட்டு, வெளியிடத்துச் சாமான்களை வாங்கிக் குடுப்பினம். அப்பிடியொரு சம்பவம் கம்பஸ்க்குள்ள நடந்திருக்கு.

கிளிநொச்சியில இருக்கிற யாழ்ப்பாணக் கம்பஸின்ர பொறியியல் பீடத்தில, செயற்கை அவயவங்கள் பொருத்திற நிலையமொண்டு இருக்குது. அந்த நிலையத்தால கை, கால் இழந்தவைக்கு செயற்கையான கால், கை பூட்டுறதுக்கு கனடா அரசாங்கம் காசு குடுத்திருக்குது. அப்பிடிக் காசு குடுக்கேக்க ஒரு நிபந்தனை போட்டவை. உள்ளூரில இருக்கிற நிறுவனங்களிட்ட தான் இந்தச் செயற்கை கால், கையை வாங்கோணும் எண்டதுதான் அந்த நிபந்தனை. யாழ்ப்பாணத்தில ஜெய்ப்பூர் எண்ட செயற்கை அவயவங்களைச் செய்யிற இடமொண்டு இருக்கு. அதைமாதிரி மாங்குளத்திலையும், கண்டியிலையும் மேத்தா எண்டொரு நிறுவனம் இருக்கு. கனகாலமா இந்த ரண்டிலையும் தரமாவும், விலை குறைவாயும் செயற்கை அவயவங்களைச் செய்துகுடுக்கினம். ஆனா அந்த ரண்டு நிறுவனத்தையும் விட்டிட்டு இந்தியாவில தான் நல்ல செயற்கை அவயவங்கள் செய்யினம்,இஞ்ச செய்யிறதெல்லாம் சரியில்லை , பாதிக்கப்பட்டவைக்கு குடுக்கேக்க நல்ல தாத்தானே குடுக்கோணும் எண்டெல்லாம் சொல்லி கனடா அரசாங்கத்தின்ர மண்டையைக் கழுவியிருக்கிராம், கிளிநொச்சி பொறியியல் பீட செயற்கை அவயவங்கள் பொருத்திற நிலையத்துக்குப் பொறுப்பா இருக்கிறவர். கரைப்பார் கரைச்சால் கல்லும் கரையேக்க, கனடா மட்டும் கரையாமல் இருக்குமோ? ஒருகட்டத்தில கனடா எம்பஸிக்காரரும் ஓமெண்டு தலையாட்ட, உந்த செயற்கைக்கை, கால் பூட்டுற நிலையக்காரர் பொக்கெற்றை நிரப்ப களத்தில உசாரோட இறங்கிட்டினம்.

முதல் கட்டமா இஞ்சையிருந்து முப்பதாறு பேருக்கு, பிளேனில ரிக்கெற் போட்டு இந்தியாவுக்கு கூட்டிக்கொண்டு போய், அவைக்குத் தேவையான கை,கால்களை பூட்டிக்கொண்டும் வந்திட்டினம். ஜெய்ப்பூர் நிறுவனத்திலயோ, இல்லாட்டி கண்டியிலையோ உதை வாங்கியிருந்தால் முப்பது பேரையும் இந்தியாவுக்குக் கூட்டிக்கொண்டு போய் , திருப்பிக் கூட்டிக்கொண்டந்த காசாவது மிச்சம். ஆனால் காற்பணச் சுண்டங்காயை முக்காற்பணம் சுமைகூலி குடுத்துத்தான் கொண்டருவம் எண்டு நிக்கிறவை, இப்பிடித்தானே செய்வினம். சரி, இஞ்ச் செய்யிற செயற்கைக் கை, கால் சரியில்லை எண்டு இந்தியாவில இவையள் வாங்கிக் குடுத்த அவயவங்கள் நல்லா இருந்திருந்தால் ஒரு பிரச்சினையுமில்லை.ஆனால் , மினக்கெட்டு இந்தியாவுக்குப் போய் வாங்கிப் பொருத்தின செயற்கைக் கை, கால் எல்லாம் சரியாப் பாவிக்குதில்லையாம். சிலது வெடிச்சு, பிய்யத் தொடங்கிட்டுது. இன்னும் சிலது காலில பூட்டுற இடத்தில இதமா இருக்காமல், அண்டி, அமத்தி கடும் நோவை வரப்பண்ணுதாம். அதால கனபேர் இந்தியாவிலபோய்ப் பூட்டின செயற்கைக் கை, கால்களை எறிஞ்சுபோட்டு முந்திப்போட்டுப் பாவிச்ச பழைய செயற்கை கை,காலைத்தான் போட்டுக்கொண்டு திரியினமாம். இப்பிடி முப்பத்தாறு ,முப்பதாறா ரண்டு ரீம் தொகுதி ஆக்களைக் கொண்டுபோய் இந்தியாவைக் காட்டிப் போட்டு வந்ததுதான் மிச்சம்., இப்ப மூண்டாவது ரீமும் போகப் போகுதாம். இப்பிடி தங்கட காசை வீணாக்கி, பாதிக்கப்பட்டவைக்கும் பிரியோசனமில்லாத அவயங்களைப் பூட்டிக் கஷ்டப்படுத்திறது கனடாக்காரருக்குத் தெரியாதாம். எப்பதான் கனடாக்காரருக்குக் கண் திறக்குமோ?

**padsi@uthayan.com**
**- பட்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் இனந்தெரியாத குழப்பம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் குழப்பம் ஏற்படும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், அவர்களுக்காக வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு விருந்து விசேஷங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும். அலுவலகத்தில் அதிகாரிகளின் பாராட்டுகள் உற்சாகம் தரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். கணவன் -மனைவிக்கிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும். கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடாமல் வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சில சங்கடங்கள் ஏற்படும். உறவினர்களுக்காக செலவுசெய்ய நேரிடும். அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளையசகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுவருவார்கள். ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பணம் கேட்டுவருவார்கள். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். சிலருக்கு ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

# யாழ். ரயில் நிலையத்திலிருந்து 782 வழித்தடப் பேருந்து சேவை!

**யாழ்ப்பாணம், நவ.26**

**சுழிபுரம், மூளாய், சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் காரைநகர் பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு 782 வழித்தடப் பேருந்து யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குச் சென்று பயணிகளை ஏற்றிச்செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தச்சேவை நேற்றுமுன்தினம் முதல் இலங்கை போக்குவரத்துச் சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு - காரைநகர் இடையே போக்குவரத்தில் ஈடுபடும் இ.போ.ச. பஸ் கொழும்பில் இருந்து வந்து அதிகாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்குச் சென்று அங்குள்ள பயணிகளை ஏற்றி யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடையும். பின்னர் அங்கிருந்து காலை 5.50 மணிக்கு வழமை போல் காரைநகர் நோக்கி போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும். அதுபோல மாலை 6.20 மணிக்கும் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு சென்று அங்குள்ள பயணிகளை ஏற்றியவாறு காரைநகர் நோக்கி போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் என காரைநகர் இ.போ.ச. போக்குவரத்துச்சாலை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-66)

## வெள்ளப்பேரிடர் உதவிக்கு அழையுங்கள்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்.மாவட்டத்தில் தொடர்ச்சியான மழை வெள்ள அனர்த்தம் காரணமாகத் தாழ்நிலப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வரும் நிலையில் வலிகாமம் வடக்குப் பகுதியைத் தளமாகக் கொண்டு செயற்படும் விதையனைத்தும் விருட்சமே இளைஞர் குழுவினர் களப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுகள் மற்றும் குடிதண்ணீர், குழந்தைகளுக்கான உணவுப் பொருள்கள், மருந்துப்பொருள்கள், ஆடைகள் போன்ற உதவிப் பொருள்களை வழங்க விதையனைத்தும் விருட்சமே குழுவினர் முன்வந்துள்ளனர்.

அதன்படி பாதிக்கப்பட்ட மக்கள் தமது சேவைகளைப் பெற்றுக்கொள்ள மற்றும் நிதி உதவிகளை வழங்க 077 3241755 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் விதையனைத்தும் விருட்சமே இளைஞரணியினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-66)

## சின்னக்கடை பொதுச்சந்தை புனரமைப்பு இடைநடுவில்

### யாழ்.மாநகரசபை அசமந்தம் வியாபாரிகள் விசனம்

யாழ்ப்பாணம், நவ.26

குருநகர் சின்னக்கடைப் பொதுச்சந்தையை புனரமைப்புச் செய்யும் பணிகள் யாழ்.மாநகரசபையால் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாக வியாபாரிகளும் பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாநகரசபைக்குச் சொந்தமான குறித்த சந்தையை 2 மாதங்களுக்குள் புனரமைப்புச் செய்வதாகக் கூறி வியாபாரிகளை வெளியில் வியாபாரம் செய்யும்படி தெரிவிக்கப்பட்டது.

எனினும் 4 மாதங்கள் கடந்துவிட்டபோதும் புனரமைப்புப் பணிகள் முழுமைப்படுத்தப்படவில்லை.

கட்டட ஒப்பந்தக்காரர்களுக்கும் மாநகரசபைக்கும் இடையில் நிதிக் கொடுக்கல் - வாங்கல் பிரச்சினை காரணமாக புனரமைப்புப் பணிகள் இடைநடுவில் விடப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபையின் இந்த அசண்டையீனச் செயற்பாட்டால் வியாபாரிகளும் பொதுமக்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே விரைவாக சின்னக்கடைச் சந்தையைப் புனரமைப்புச் செய்து எங்கள் வியாபார நடவடிக்கையை சிரமம் இல்லாமல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், நவ.26

சைவ வாழ்வியலில் திருவிளையாடற் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் கைதடி நாவற்குழி தெற்கு அருள்மிகு பெரும்படை அம்மன் ஆலயத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க.கயிலைவாசனின் "விறகு விற்ற படலம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். (எ-41)


சீரற்ற காலநிலை

## தென்மராட்சியில் 147 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ.26

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெய்துவரும் அடைமழையால் நேற்றுமுன்தினம் வரையில் 44 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் மத்திய கிராம அலுவலர் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 112 பேரும் கைதடி கிழக்குப் பிரிவில் 6 குடும்பத்தைச் சேர்ந்த 23 பேரும் மிருசுவில் தெற்குப் பிரிவில் 5 குடும்பத்தைச் சேர்ந்த 11 பேரும் கோயிற் குடியிருப்புப் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



மரநடுகை மாதம் (நவம்பர்)

"தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உட்காரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப்பெரியளவில் வளர்ச்சியடையும்"

– கிரேக்கப் பழமொழி –


# உள்ளமே பெருங்கோயில்...!

இலங்கையின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள் ளனர் என்பது பேராதனைப் பல்கலைக்கழகமும் களனிப் பல்கலைக்கழகமும் இணைந்து நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டிருக்கின்றது. இந்த ஆய்வின்படி நாட்டில் 19.4 வீதத்தினர் மன அழுத்தத்துக்கு உள்ளாகியி ருக்கின்றனர். இதில் அச்சத்தை ஏற்படுத்துவது 2023ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில் 10 முதல் 24 வயதுக்குட் பட்டவர்களில் 39 சதவீதமானவர்கள் மன அழுத்தப் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்பதுதான். இது எதிர் காலத்தின் நெருக்கடிமிக்க - தீவிர விளைவுகளை ஏற் படுத்தக்கூடியது.

இளவயதினரின் மனநலக் குறைபாடுகள் தனிப்பட்ட பிரச்சினைகளாக மட்டுமே இருக்காது; மன அழுத்தத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள முயலும் இளைய தலைமுறையினர் ஆபத்தான வழிகளை நோக்கித் தள்ளப்படுகின்றனர். அவை குடும்பங்கள், கல்வி அமைப்புகள், சமூக ஒழுங்கு, தேசிய வளர்ச்சி ஆகிய அனைத்தையும் நேரடியாக பாதிக் கக்கூடியவை. மன அழுத்தம் அதிகரிக்கும்போது, கவனச்சிதைவு, கல்வித் திறனில் வீழ்ச்சி, சமூக ஒழுங்கில் நிலைத்தன்மையின்மை மற்றும் இளைஞர்கள் ஆபத் தான நடத்தைக்கு ஆளாகும் அபாயம் என்பன வெகுவாக உயர்கின்றன. இதன் விளைவாக, போதைப்பொருள் களுக்கு அடிமையாவது - உயிரை மாய்த்துக்கொள்வது என இளவயதினரின் வாழ்க்கை திசைமாறிச் செல்ல நேரிடுகின்றது. இலங்கையில் உளள ஆற்றுப்படுத்தல்கள் இன்னும் போதுமான முறையில் வடிவமைக்கப்படவில்லை என்பது மிகப்பெரிய குறை. இளையோர்கள் தங்கள் உளப்பிரச்சினைகளை தயக்கமின்றித் தெரிவித்து, நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிமுறைகள் போதுமான அளவில் இல்லை. இந்தப் பின்னணியில் இளைய தலைமுறையிடையே மனநல நெருக்கடி வேகமாக விரிவடைவது ஆச்சரியமானதல்ல. ஆனால் இந்த வேகமான விரிவடைவு நாட்டுக்கும் - சமூகத்துக்குக்கும் காலப்போக்கில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்வது அவ சியம்.

நாட்டிலும் - வடக்கு, கிழக்கிலும் இளவயதினரின் தவறான முடிவுகளுக்கும், அவற்றால் ஏற்படும் இறப்புகளுக்கும் மன அழுத்தப் பாதிப்புகளே முக்கியமான காரணிகளாக இருக்கின்றன. தற்கால இளஞ்சமூகத்தினர் அழுத்தங்களை எவ்வாறு கையாள்வது - அவற்றில் இருந்து எவ்வாறு விடுபடுவது என்பதில் பரிச்சயமற்றவர்களாகவே இருக்கின்றனர். அவர்களை அந்தப் பாதிப்புகளில் இருந்து வெளிக்கொணரவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினதும் - சமூகத்தினதும்- ஒவ்வொரு பிரஜைகளினதும் கைகளிலுமே இருக்கின்றது. எதிர்காலத்தின் அடித்தளமான இளையோர் ஆரோக்கியமான மன நிலையில் இல்லாவிட்டால், அனைத்துமே பாழாவிடும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் தொழில்முறை மனநல ஆலோசகர்களை நியமித்தல், இளவயதினருக் கான இலவச, எளிதில் அணுகக்கூடிய உளவள ஆற்றுப் படுத்தல் சேவைகளை விரிவாக்குதல், குடும்பங்களுக்கு மனநல விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை வழங்குதல், சமூக மட்டத்தில் இளைஞர்களை ஈடுபடுத்தும் விளையாட்டு, கலை, தொழில்நுட்பப் பயிற்சி போன்ற திட்டங்களை அதிகரித்தல், போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை உளவள சேவைகளுடன் ஒருங்கி ணைந்த அணுகுமுறையாக மாற்றுதல் போன்ற விடயங்களில் அரசாங்கம் அக்கறை காட்டுவதன்மூலம் ஆரோக்கியமான மனநிலையுடன் கூடிய எதிர்காலச் சந்ததியை உருவாக்க முடியும். நாட்டு மக்களின் மனநலப் பிரச்சினையை அறிக்கைகளுடன் கடந்துவிடாது - அதற்கான தீர்வுகளை நோக்கிச் செல்வதே நாட்டின் - சமூகத்தின் -ஒவ்வொரு வரின் கனவுகளையும் எதிர்காலத்தையும் காப்பதற்கான சரியான நடவடிக்கையாக இருக்கும்.




# மன அழுத்தப் பாதிப்பு இலங்கையில் உயர்வு



**கொழும்பு, நவ.26**
**ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் மன அழுத்தத்தின் பரவல் அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பேராதனை மற்றும் களனிப் பல்கலைக்கழகங்கள் இணைந்து நடத்திய ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஆசியாவைப் பொறுத்தவரையில் 16.1 சதவீதமானோர் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்கின்றனர்.

2023ஆம் ஆண்டில் 10 முதல் 24 வயதுக்குட்பட்ட இலங்கையர்களில் 39 சதவீதமானோர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர். அதிலும் குறிப்பாக 19 வயதுக்குட்பட்டவர்களிடையே 7.0 சதவீதமானோர் உயிர்மாய்ப்புக்கு முயற்சித்துள்ளனர். அத்துடன் 35.0 சதவீதமானோர் ஒருவருக்கொருவர் முரண்பாடுகளை அனுபவிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# இத்தாலியிலுள்ள இலங்கையர்களுக்கு 'லைசென்ஸ்'

கொழும்பு, நவ.26
இத்தாலியில் வசிக்கும் இலங்கையர்களுக்கு ஓட்டுநர் உரிமங்களை வழங்கும் திட்டத்துக்கு இலங்கையின் அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இத்தாலியில் ஓட்டுநர் உரிமங்களுக்குப் பொறுப்பான நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. (ச-இ)



# சீரற்ற காலநிலையால் 1,790 பேர் பாதிப்பு!

கொழும்பு, நவ.26
சீரற்ற காலநிலை காரணமாக 10 மாவட்டங்களில் 504 குடும்பங்களைச் சேர்ந்த 1,790 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையம் தெரிவித்துள்ளது.

சமீபத்திய நாள்களில் சீரற்ற காலநிலை காரணமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

பலத்த மழை மற்றும் பலத்த காற்றுக் காரணமாக இரண்டு வீடுகள் இடிந்து விழுந்துள்ளன, 193 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதேவேளை அவசர நிலைகளுக்கு 117 என்ற அவசர எண்ணைத் தொடர்புகொள்ளுமாறும் பொதுமக்களை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வலியுறுத்தியுள்ளது. (ச-இ)

# பீடி இலைகளுடன் இருவர் கைது

கொழும்பு, நவ.26
சட்டவிரோதமாக நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட பீடிஇலைகளுடன் இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 699 கிலோகிராம் 700 கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கப்ரக வாகனமொன்றும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

## நடப்பாண்டில்

# 18,000 நிறுவனங்கள் வரி செலுத்தப் பதிவு

கொழும்பு, நவ.26
இந்த ஆண்டு இதுவரை 18,000க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் வரி செலுத்துதலுக்காகப் புதிதாகப் பதிவுசெய்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ருக்தேவி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

அதேவேளை இதே காலகட்டத்தில் 200,000க்கும் மேற்பட்ட புதிய தனிநபர் வரி செலுத்துவோர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை – கார்த்திகை 11
27.11.2025
சுபநேரம் : 01.42 - 03.12
ராகுகாலம் : 07.42 - 09.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

பாரதி வீதி "அ" பகுதி தேவிபுரம், புதுக்குடியிருப்பை சேர்ந்த பாலச்சந்திரன் இலங்கேஸ்வரி ஆகிய நான் எனது பெயரை பாலச்சந்திரன் குமுதா என மாற்றம் செய்கின்றேன் என இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

பாலச்சந்திரன் குமுதா

# ராஜபக்சக்களிடம் அதிகாரத்தை கையளிக்கமாட்டார்கள் மக்கள்

*அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவிப்பு*

கொழும்பு, நவ.26

ஊழல்வாதிகளை ஒன்றிணைத்த எதிர்க் கட்சிகளின் கூட்டு, அரசாங்கத்துக்கு சவாலாக அமையாது. நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய ராஜபக்சக் களை மக்கள் ஒருபோதும் மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரமாட்டார்கள் என்று அமைச்சர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:- அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. கடந்தகால ஊழல் மோசடிகள் தொடர்பாகத் தற்போது முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படு கின்றன. அதனால் எதிர்க்கட்சியினர் அச்சமடைந்துள்ளனர். சட்ட நடவடிக்கைகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவே அவர்கள் ஒன்றிணைந்துள்ளனர்.

ராஜபக்சக்கள் ஊழல்வாதிகள், படுகொலையாளிகள் என்று கடந்த காலங்களில் விமர்சித்தவர்கள் இன்று நாமல் ராஜபக்சவை இளவரசர் என்று அழைக்கின்றார்கள். இது நகைப்புக்குரியது.

தேசிய கடன் மறுசீரமைப்பின்போது பாதிக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடுவது முற்றிலும் தவறானது.

கடன் நெருக்கடிக்குள் உள்ளாக்கப்பட்டிருந்த ஆயிரத்து 93 தொழில் முயற்சியாளர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. நிதியமைச்சின் தலையீட்டுடன் 200 முயற்சியாளர்களின் கடன் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. ஏனையோரின் கடன்களை மறுசீரமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)

## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2026

யாழ் மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள், மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் **கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு, உரிய ஆவணங்களுடன்** எதிர்வரும் 01.12.2025 தொடக்கம் 23.12.2025ஆம் திகதி **மதியம்** 12.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை பௌதிக திட்டமிடல் பகுதியில் மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞராக பதிவினை மேற்கொள்ளலாம்.
- ஏற்கனவே 2025 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவு செய்தவர்கள் NVQ-5 Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை புதுப்பித்துக் கொள்ள முடியும். மேலும் NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை கற்பவர்கள் அதனை உறுதிப்படுத்தி ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவினை மேற்கொள்ள முடியும்.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களும், புதிதாக பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்களும் 2026 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக யாழ் மாநகர சபையில் தொழிற்பட முடியாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**குறிப்பு:**

- படவரைஞராக பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவ கட்டணம் ரூபா **1000.00+ VAT**
- உரியவாறு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, படவரைஞராக பதிவு மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கான கட்டணம்- ரூபா **2000.00 + VAT**

**முதல்வர்,**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 08 . 1971



மறைவு 17 . 11 . 2025

### திருமதி மோகனாம்பிகை இராஜன்

**(முன்னாள் ஆசிரியை-யா/செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை)**

செம்பியன்பற்று தெற்கு, செம்பியன்பற்றை பிறப்பிடமாகவும் தற்போது சுவிஸ்லாந்து நாட்டை வதிவிடமாகவும் கொண்ட மோகனாம்பிகை இராஜன் (செல்வதி) அவர்கள் கடந்த 17.11.2025 அன்று சுவிஸ்லாந்தில் காலமாகி விட்டார்.

அன்னார் தங்கராசா J.P (ஓய்வுபெற்ற முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபையின் மருதங்கேணி உப அலுவலக பொறுப்பதிகாரி) கமலாம்பிகை இணையரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் - கனகம்மா (நுணாவில்) தம்பதியரின் அன்பு மருமகளும், இராஜனின் பாசமிகு மனைவியும், செந்தூரனின் அன்புத் தாயாரும், ஜெகதாம்பிகை (பருத்தித்துறை பிரதேச சபை-உப அலுவலகம், மருதங்கேணி), ஞானானந்தன் (கோட்டக் கல்வி அலுவலகம் - கரவெட்டி), வதனவேணி (நியூஸிலாந்து), கார்த்திகா (பிரதேச செயலகம் - மருதங்கேணி), கௌசிகா (கால்நடை வைத்தியர் அலுவலகம் - கரைச்சி) ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரியும், முரளிதரன் (கொழும்பு), வாசுகி (யா/கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி), கிருபாகரன் (நியூஸிலாந்து), காண்டீபன் (கரைச்சி பிரதேச சபை), ஜனன் (மாவட்ட செயலகம் - கிளிநொச்சி) மற்றும் நிர்மலராயன் (சுவிஸ்), முரளிதரன் (கனடா), ஞானச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2025) சுவிஸ் நாட்டில் Friedhot am Hornli, Hornliallee 70, 4125 Riehen எனும் இடத்தில் நடைபெறு வதோடு அன்றைய தினம் நினைவு கூரல் நிகழ்வானது அன்னாரின் இல்லமான செம்பியன்பற்று தெற்கில் இடம்பெறும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**
**ஞானானந்தன் (சகோதரன்)** - 077 3568 529
**ஜனன் (மைத்துனர்)** - 077 3678 242

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 10 . 05 . 1950



மறைவு 29 . 10 . 2025

**(கடந்த 29.10.2025 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்)**

### கந்தையா தியாகராஜா

**(முன்னாள் உரிமையாளர் - புளியங்கூடல் தியாகராஜா ஸ்ரோர்ஸ்)**

**திதி : வளர்பிறை அட்டமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (27.11.2025) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் **"கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும்"** வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (28.11.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் **"அன்னாரது இல்லத்திலும்"** நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

மேலும் அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஞானவைரவர் வீதி,**
**கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**
**074 051 7328**

(CS/59994) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் பெயர்ப்பலகையை அகற்றி இன முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சி

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

**வாழைச்சேனை மற்றும் கொக்கட்டிச்சோலைப் பகுதிகளில் தொல்பொருள் அடையாளப்படுத்தல் பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டமை தொடர்பாக முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகிறன. இலங்கையின் எந்த இடத்திலும் தொல்பொருள் இடங்களை அடையாளப்படுத்தும் இயலுமை உள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**


நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வாழைச்சேனை பிரதேசசபையின் தலைவர் எஸ். சுதாகரன், பிரதிச் செயலாளர் பத்மநீதன், பிரதேச சபை உறுப்பினர் ஆனந்தி சிவராசன் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரே பெயர்ப்பலகைகளை அகற்றினர் என்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முறையான விசாரணைகளை மேற்கொள்ள பொலிஸ்மா அதிபர் அந்தப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். சந்தேக நபர்களைக் கைது செய்ய விசாரணைகளை மேற்கொள்ள களுவாஞ்சிக்குடி உதவி பொலிஸ் அத்தியட்சகருக்குப் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

சட்டம் அனைவருக்கும் பொதுவானது. ஒரு சிலர் தமக்கு பிராந்தியம் மற்றும் இராச்சியம் இருக்கின்றது என்று நினைத்துச் செயற்படுகிறார்கள். தொல்பொருள் சின்னங்களை அகற்றி இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். தொல்பொருள் திணைக்களம் நாட்டில் சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் எவ்விடத்திலும் தொல்பொருள் இடங்களை அடையாளப்படுத்தும் இயலுமை உள்ளது - என்றார். (எ-இ)



# மாவீரர் நாளை முன்னிட்டு ஏழாலையில் குருதித்தானம்

யாழ்ப்பாணம்,நவ.26

மாவீரர் நாளை முன்னிட்டு ஏழாலையூர் நண்பர்களின் ஏற்பாட்டில், ஏழாலை உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குருதிக்கொடை முகாம் இடம்பெற்றது.

இதில் ஏழாலையைச் சேர்ந்த 21 பேர் ஆர்வத்துடன் குருதிக்கொடை வழங்கினர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் நேரடியாக குருதிச்சேகரிப்பில் ஈடுபட்டனர். (சு-66)

# சுகாதாரக்கட்டமைப்புத் தீர்வுக்கு அரசாங்கத்துக்குக் காலக்கெடு

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.26

மருத்துவர்கள் மற்றும் பொதுச் சுகாதாரக் கட்டமைப்பைப் பாதிக்கும் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தெளிவான காலக்கெடுவை அறிவிப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்துக்கு 48 மணிநேர அவகாசத்தை வழங்கியுள்ளது. அவ்வாறு செய்யத் தவறினால் தொழிற்சங்க நடவடிக்கைகள் தீவிரமடையும் என்று அந்தச் சங்கம் எச்சரித்துள்ளது.

மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு 2026ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் அர்த்தமுள்ள தீர்வுகளை வழங்கத் தவறியுள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் அவசரகால செயற்குழுக் கூட்டத்தில், முன்மொழியப்பட்ட தீர்வுகளுக்கு ஒரு தெளிவான காலக்கெடுவை நிர்ணயிப்பது அவசியம் என்று ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

பொறுப்பான அதிகாரிகள் அத்தகைய திட்டத்தை அறிவிக்க 48 மணி நேர அவகாசம் வழங்க சங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் இன்று புதன்கிழமை நடைபெறவிருக்கும் எமது மத்திய குழுக் கூட்டத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (எ-இ)

# குருபூஜை விழா

யாழ்ப்பாணம், நவ.26

சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவும், உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை பெரியாரின் குருபூஜை விழாவும் அராலி கிழக்கு மலையாளங்காடு ஐயனார் கோவிலில் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளன.

சைவப்புலவர் பிரசங்கச் சக்கரவர்த்தி சி. கா. கமலநாதனின் "ம.க.வேற்பிள்ளை சைவப்பெரியாரின் சமயப்பணி" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறும். (எ-41)


**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்**
**தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான**
**கேள்வி கோரல் - 2026**

1. வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2025.11.26 - 2025.12.10 நண்பகல் 12.00 மணிவரை
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2025.12.11 பி.ப 14.00 மணி வரை
   கேள்வி திறக்கும் திகதி : 2025.12.11 பி.ப 14.00 மணி
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம் பெறாமல் இருக்கவேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூரில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா25,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக ரூபா 450,000/= ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி என எழுதப்பட்டு, இணைப்படிவம் கொண்ட தபாலுறையில் **இணைப்பிரதி** என எழுதப்பட்டு **தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
8. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
9. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள் / கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
10. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் கிழக்கு பிரதேசசபை பெறுகைக் குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
11. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| 1. | வலிகாமம் கிழக்கு பிரதேசசபை தலைமை அலுவலகம், புத்தூர் | 01 | 01 | 2026.01.01 - 2026.12.31 |
| 2. | உரும்பிராய் உப அலுவலகம் | 01 | - | 2026.01.01 - 2026.12.31 |
| 3. | திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையம், நீர்வேலி | 01 | 01 | 2026.01.01 - 2026.12.31 |
| 4. | கோப்பாய் உப அலுவலகம் | 01 | - | 2026.01.01 - 2026.12.31 |
| 5. | நீர்வேலி உப அலுவலகம் | 01 | - | 2026.01.01 - 2026.12.31 |
| 6. | அக்கரை கடற்கரை சுற்றுலா வளாகம் | 01 | 01 | 2026.01.01 - 2026.12.31 |
| 7. | அச்சுவேலி கொல்களம் | 01 | 01 | 2026.01.01 - 2026.12.31 |
| 8. | அச்சுவேலி சந்தை | 01 | - | 2026.01.01 - 2026.12.31 |
| 9. | நிலாவரை சுற்றுலா மையம் | 01 | - | 2026.01.01 - 2026.12.31 |
| | மொத்தம் | 09 | 04 | |

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,
புத்தூர்
2025.11.26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான வழிமுறை மட்டுமே புலம்பெயர்வுக்கான

## வெளிநாட்டிற்கு செல்வதற்கே ரமேஷ் எப்போதும் விரும்பினான்.

இலங்கையின் கிழக்கு கரையோரத்தில் உள்ள ஒரு சிறிய மீனவ கிராமத்தில் வளர்ந்த ரமேஷ் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய பின்னர் பணத்தை சேமித்து வைத்திருப்பதையும், மோட்டார் சைக்கிள்களை வாங்குவதையும் சுதந்திரமாக வாழ்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதையும் அவர்கள் சொத்துக்களை வாங்குவதையும் பற்றிய கதைகளை அடிக்கடி வீடியோ வழியாக பார்த்திருப்பதுடன் அவ்வாறான கதைகளை கேட்டும் இருக்கின்றான். இது இவ்வாறிருக்க, அவனது சொந்தக் குடும்பம் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே சிரமப்பட்டுக் கொண்டிருந்தது. அவனது தந்தை நோய்வாய்ப்பட்டு படுக்கையில் விழுந்த பிறகு, குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ரமேஷின் தாய் தெருவோரத்தில் சிற்றுண்டிகளை விற்கத் தொடங்கினார்.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூத்தவனாக இருந்த ரமேஷ் தனது குடும்பத்திற்கு ஒத்தாசை வழங்குவதற்காக சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் பாடசாலைக் கல்வியை தொடராமல் தனது கல்வியை முடித்துக் கொண்டு பாடசாலையை விட்டு வெளியேறினான். மணல் ஏற்றுதல், மீன்பிடி வலைகளை பழுதுபார்த்தல் போன்ற நாளாந்த சம்பளத்திற்கு வேலைகளைச் செய்யத் தொடங்கிய அவனுக்கு இதன் மூலம் ஒரு சிறிய வருமானம் மாத்திரமே கிடைத்தது. ஆயினும், இதைவிட பெரியதொரு வாழ்கையை அடைந்துகொள்வதைப் பற்றி கனவு காண்பதை மாத்திரம் அவன் நிறுத்திக்கொள்ளவில்லை. வெளிநாட்டிற்கு சென்று சிறந்ததொரு வேலையைத் தேடிக்கொண்டு வீட்டிற்குப் பணம் அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் அவனது மனம் இரவு பகல் என பாராமல் போராடிக் கொண்டிருந்தது. தன்னைச் சுற்றியுள்ள ஏனைய இளைஞர்களைப் போலவே புலம்பெயர்வுதான் இந்நிலையிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழி என்று அவன் நம்பினான்.

ஒரு நாள், பாடசாலையில் தன்னுடன் படித்த ஒரு நண்பன் ஐரோப்பிய நாடு ஒன்றில் வேலைகளை ஏற்பாடு செய்து தரக்கூடிய ஒரு "நபரைப்" பற்றி அவனிடம் கூறினான். மொழித் திறனோ அல்லது பெருமளவு ஆவணங்களை நிரப்புவதோ தேவையில்லை என்றும் முன்கூட்டியே பணம் செலுத்தினால் மட்டும் போதுமானது என்றும் கூறினான். அந்த வேலையின் ஊடாக மாத்திற்கு ரூபாய் 400,000 இற்கும் மேல் உழைக்கலாம் என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டது. கிடைக்கக் போகும் சலுகையால் மயங்கி எந்தவொரு ஆபத்துகளையும் பற்றி ஒரு கணமேனும் சிந்தியாமல் ரமேஷ் அந்த தொழில் முகவரைச் சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே தன்னிடம் இருந்த அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்தார். அவனது தாயார் இந்த விடயத்தில் சற்று தயக்கம் காட்டினார். ஆனாலும் ரமேஷ் அவரை சமாதானப்படுத்தினான். "இது எனக்கு கிடைத்த ஒரு அரிய வாய்ப்பு," என்று கூறினான். "நான் சில ஆண்டுகளில் திரும்பி வருவேன், நிலைமை மாறும்." தொழில் முகவர் என்று அழைக்கப்படுபவருக்கு பணம் செலுத்துவதற்காக ரமேஷ் தங்கள் குடும்ப வீட்டை அடமானம் வைத்து ரூபாய் 2 மில்லியன் கடன் வாங்கினான்.

அதனையடுத்து பெயர் கூட தெரியாத ஒரு இடைமாறல் நாட்டிற்கு ரமேஷ் அழைத்துச் செல்லப்பட்டான். ஆனால் அவன் தரையிறங்கிய தருணத்திலிருந்து, விடயங்கள் தடம் மாறி தவறான முறையில் நகர ஆரம்பித்தது. ரமேஷ் விமான நிலையத்திலிருந்து நேரடியாக ஒரு நெரிசலான தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் அங்கு ஏராளமான பிற இலங்கையர்கள் மற்றும் தெற்காசியர்கள் வைக்கப்பட்டிருந்தனர். தேவையான நடவடிக்கைளை மேற்கொள்வதற்காக என்று கூறி அவரது கடவுச்சீட்டும் அவனிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் அது ஒருபோதும் திருப்பித் தரப்படவில்லை. ஒரு கட்டுமான தளத்தில், சம்பளமோ அல்லது ஓய்வு நாட்களோ இல்லாமல், மிக மோசமான சூழ்நிலையில் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்கு ஏற்பட்டது. அவனது ஒப்பந்தம் பற்றியோ அல்லது லீவு பற்றியோ கேட்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அச்சுறுத்தல்களையும் கூச்சலிடுதலையும் சந்திக்க வேண்டிய நிலையே ஏற்பட்டது. ரமேஷுக்கு ஆங்கிலமோ அல்லது அவர் இருந்த இடத்தின் உள்ர் மொழியோ பேசத் தெரியவில்லை என்பதுடன் தொலைபேசி வசதியும் இருக்கவில்லை. தொழில் முகவர் தன்னை ஏற்கனவே இணங்கிக்கொண்ட நாட்டிற்கு அழைத்துச் செல்வார் எனும் எண்ணம் மட்டுமே அவனிடம் இருந்தது. நாட்கள் வாரங்களாக மாறின. ஆனால் எதுவும் நடந்ததாக தெரியவில்லை. தான் ஏமாற்றப்பட்டுள்ளதையும் தனது முகவர் போலியானவர் என்றும் ஒரு ஆட்கடத்தல்காரர் என்பதையும் ரமேஷ் உணரத் தொடங்கினான்.



பின்னர் அந்த ஆட்கடத்தல்காரர் மீண்டும் அவர்களிடம் வந்து ஐரோப்பாவிற்கான பயணம் படகு வழியாக தொடரும் என்று தெரிவித்தார். "இப்போது மக்கள் இப்படித்தான் சென்றடைகின்றார்கள்," என்று கூறினார். "நீங்கள் படகு பயணத்தை எப்படியாவது சமாளித்துக் கொள்ளத் தான் வேண்டும்" என்ற கூறியதும் ரமேஷ் பயந்தான். ஆனால் வேறெந்த வழியும் இருக்கவில்லை என்ற நிலையில், இனிமேல் இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்று நினைத்து அதனை ஒப்புக்கொண்டான்.

இருள் சூழ்ந்த அந்த இரவில் அவனும் மற்றும் பலரும் தூரப் பிரதேசத்தில் இருந்த ஒரு கடற்கரையில் இருந்து ஒரு பழைய மீன்பிடி இழுவைப் படகில் ஏற்றப்பட்டனர். இழுவைப் படகு சன நெரிசல் மிக்கதாக இருந்ததுடன் பாதுகாப்பு உபகரணங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. ஒரு சில பைகளில் இருந்த பிஸ்கட்டுகளைத் தவிர வேறு எந்த உணவும் இருக்கவில்லை என்பதுடன் போதுமான அளவு தண்ணீர் கூட இருக்கவில்லை. அவர்கள் ஆழ் கடலில் பயணிக்க தொடங்கியவுடன் நிலைமை மோசமாக மாறியது. கடல் கொந்தளிப்பாக இருந்ததுடன் கடல் பயணத்தால் பலருக்கு குமட்டல் போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்படத் தொடங்கின. பகலில் வெயில் அவர்களை சுட்டெரித்தது. இரவில், குளிர் காற்று அவர்களின் மெல்லிய ஆடைகளைத் துளைத்து உள்ளே நுழைந்தது. ஒரு நாள் இரவில் ஓர் இளைஞன் படகில் இருந்து தவறி விழுந் ததுடன் அவனைக் கடைசிவரை கண்டுபிடிக்கவே முடியவில்லை.



ஐந்தாவது நாளில், தண்ணீர் படகுக்குள் கசிய ஆரம்பித்தது. அச்சம் அவர்களை வேகமாகக் கௌவிக்கொண்டது. எல்லா நம்பிக்கையும் இழந்துவிட்டதாக அவர்கள் நினைத்தபோது அவர்களைக் கடந்து சென்ற ஒரு சரக்குக் கப்பல் அவர்களைக் கண்டு அவர்களை மீட்டு அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு இந்த புலம்பெயர்ந்தோரை அருகிலுள்ள நாட்டிடம் ஒப்படைத்தது. தனது உயிரைத் தக்க வைத்துக் கொள்வதை தவிர இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை ஏற்பட இறுதியில் ரமேஷ் அந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டான். ஆட்கடத்தல்காரனை நம்பி தனது பணத்தையும் கனவையும் ரமேஷ் இழந்தான். ஐரோப்பாவிற்குள் நுழைய முயன்ற குறுக்குவழி தவறு என்பதை அவன் உணர்ந்தான். பயணம் அவனுக்கு நிறைய பாடங்களைக் கற்றுக் கொடுத்தது. தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைய குறுக்குவழிகள் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். எந்த வெளிநாட்டிலும் வேலைக்கு தகுதியும் அனுபவமும் தேவை. எந்த தகுதியும் அனுபவமும் இல்லாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக வழங்கப்படுகின்ற வாக்குறுதி என்பது, நீங்கள் ஆபத்தில் நுழைய முயற்சிக்கிறீர்கள் என்பதற்கான எச்சரிக்கையைத் தவிர வேறொன்றும் அல்ல.

இப்போது தனது கிராமத்தில், ரமேஷ் தனது பயணத்தைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறான். ஒழுங்கற்ற புலம்பெயர்வின் ஆபத்துகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த இளைஞர் குழுக்கள் மற்றும் உள்;ர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் அவன் இணைந்து பணியாற்றுகிறான். வாக்குறுதியளிக்கப்பட்ட அனைத்தையும் நம்ப வேண்டாம் என்று அவன் மற்றவர்களை வலியுறுத்துகிறான். "உங்களுக்கு ஆவணங்கள் தேவையில்லை என்று யாராவது சொன்னால், அல்லது இவை அனைத்தும் இரகசியமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், அது உங்களுக்கு ஆபத்து வரப்போகின்றது என்பதற்கான எச்சரிக்கை அறிகுறி" என்று அவன் இளைஞர்களிடம் கூறுகிறான். "அவர்கள் உங்களிடம் பொய் சொல்கிறார்கள்". இப்போது பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரையும் ஆட்கடத்தல்காரரையும் எவ்வாறு வேறுபடுத்துவது என்பதை அவன் கற்பிக்கின்றான்.

ரமேஷின் கதை ஒரு உண்மையான சம்பவமே. சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை மறைக்க சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் இதேபோன்ற பயணங்களை மேற்கொண்ட பல இலங்கை இளைஞர்களின் உண்மையான மற்றும் பேரழிவைக் கொண்டு வரும் அனுபவங்களை பிரதிபலிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் மட்டும், ஒழுங்கற்ற புலம்பெயர்வு வலையமைப்பில் சிக்கிய பின்னர் 1,700 க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மலேசியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டனர். மார்ச் 2025 இல், ஒவ்வொருவரும் 4.5 மில்லியன் ரூபாய் வரை செலுத்தி பெற்ற போலி விசாக்களுடன் ஒன்பது இலங்கையர்கள் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். டிசம்பர் 2023 இல், 14 இலங்கையர்கள் ஒழுங்கற்ற முறையில் செல்ல முயன்றபோது கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கதைகள் அதிகரித்து வரும் ஒரு நெருக்கடியைப் பிரதிபலிக்கின்றன. அதிக ஊதியம் தரும் வேலைகளையும், விரைவாக விசாக்களையும் பெற்றுத் தருவதாகவும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்குள் நுழைவதற்கு உத்தரவாதம் வழங்குவதாகவும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்கடத்தல்காரரர்கள் இளைஞர்களின் நம்பிக்கைகளை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் அதிலிருக்கும் ஆபத்துகளையும் சுரண்டலையும் மற்றும் சட்டரீதியான விளைவுகளையும் அரிதாகவே குறிப்பிடுவார்கள். ஆட்கடத்தல்காரரின் ஒரே நோக்கம் பணம் சம்பாதிப்பதுதான். மேலும் ஒழுங்கற்ற புலம்பெயர்ந்தோருக்கு உதவ அவர்களுக்கு எந்த பிணைப்பும் கடப்பாடும் இல்லை. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்திற்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கையின் பிரகாரம் ஆட்கடத்தல் என்பது ஒரு சர்வதேசக் குற்றம் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆட்கடத்தலைக் குற்றமாக பிரகடணப்படுத்தும் சர்வதேச மற்றும் நாடுகளுக்குரிய சட்டங்கள் உள்ளன.

வாக்குறுதிகளால் சிக்கிக்கொள்வது என்றால் என்ன என்பதை ரமேஷ் இப்போது அறிவான். உண்மையான வாய்ப்பு குறுக்குவழிகள் அல்லது இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் வராது என்பதை அவன் மற்றவர்களுக்கு நினைவூட்டுகிறான். புலம்பெயர்வு நம்பிக்கையை அளிக்கும் - ஆனால் பாதுகாப்பான, சட்டபூர்வமான மற்றும் ஒழுங்கான வழிகள் மூலம் அவை மேற்கொள்ளப்படும் போது மாத்திரமே அது அவ்வாறு அமையும். உதவி, விழிப்புணர்வு மற்றும் சரியான வழிகாட்டுதலுடன், இளைஞர்கள் தங்கள் எதிர்காலத்தையும் - அவர்களின் வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆர்வமுள்ள புலம்பெயர்ந்தோர் தகவலறிந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும், போலி தொழில் முகவர்களாக மாறுவேடமிட்டுக் கொண்டுள்ள ஆட்கடத்தல்காரர்களை நம்பியிருக்கக்கூடாது என்றும் அவன் இப்போது வலியுறுத்துகிறான்.

**பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதற்காக இலங்கையில் உள்ள புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) 077 441 0086 என்ற இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ளவும்.**

இந்த தகவல் பெட்டிகள் கட்டுரையில் சேர்க்கப்படும் - இந்த கட்டமைக்கப்பட்ட உரை கட்டுரையின் உள்ளே உள்ளடக்கப்படும் என்பதுடன் அது மேலே உள்ள உண்மையான கதையின் தொடர்ச்சியாக இடம்பெறாது)

### நீங்கள் புறப்படுவதற்கு முன்:

வெற்றிகரமான மற்றும் பாதுகாப்பான புலம்பெயர்வு பயணத்தை உறுதிசெய்ய, வருங்காலத்தில் புலம்பெயர்ந்தோர் அத்தியாவசிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

- **வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் வேலை வாய்ப்புகளின் சட்டப்பூர்வ நிலையைச் சரிபார்க்கவும்:** எந்தவொரு கட்டணத்தையும் செலுத்துவதற்கு அல்லது புறப்படுவதற்கு முன் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் சட்டப்பூர்வ பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அரசாங்க தகவல் வழிமூலங்கள் மூலம் வேலை வாய்ப்புகளைச் சரிபார்க்கவும்.
- **சட்டபூர்வமான வழிகளைப் பயன்படுத்தவும்:** பதிவுசெய்யப்பட்ட ஆட்சேர்ப்பு முகவர் நிறுவனங்கள், உத்தியோகபூர்வ தூதரக வழிமூலங்கள் அல்லது சரிபார்க்கப்பட்ட நிறுவன்ங்கள் மூலம் விசாக்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.
- **இடைத்தரகர்கள் மற்றும் உரிமம் பெறாத முகவர்களைத் தவிர்க்கவும்:** புலம்பெயர்வு முகவர்களாகக் காட்டிக் கொள்ளும் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலியாவதைத் தவிர்க்க பதிவுசெய்யப்பட்ட.'.உரிமம் பெற்ற ஆட்சேர்ப்பு நிறுவனங்களுடன் நேரடியாகக் கையாளவும்.
- **ஆராய்ச்சி சார்ந்த இலக்கு நாடுகள்:** நீங்கள் செல்லத் திட்டமிடும் நாட்டின் சட்டங்கள், தொழில் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் புரிந்துகொண்டு, புறப்படுவதற்கு முன் உங்கள் தொழில்தருநர் பற்றிய தகவல்களைச் சரிபார்க்கவும்.

### பயணத்தைத் தொடங்குவதற்கு முனனர் தேவைப்படும் அத்தியாவசிய ஆவணங்கள்:

பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான முறையில் புலம்பெயர்வதற்கு, தனிநபர்கள் பின்வரும் அத்தியாவசிய ஆவணங்களைத் தயாரித்து பாதுகாக்க வேண்டும்:

- **செல்லுபடியாகும் கடவுச்சீட்டு:** சர்வதேச பயணத்திற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டினை கொண்டிருக்க வேண்டும்.
- **விசா:** தேவையைப் பொறுத்து, புலம்பெயர்வோர் சரியான மற்றும் செல்லுபடியாகும் விசா வகையைக் (வேலை, படிப்பு, சுற்றுலா போன்றவை) கொண்டிருத்தல் வேண்டும்.
- **தொழில் அனுமதிப்பத்திரங்கள்:** வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்ந்தால், உத்தியோகபூர்வ தொழில் அனுமதிப்பத்திரம் அவசியானதாகும்.
- **தொழில் ஒப்பந்தங்கள்:** தொழில்தருநரால் வழங்கப்பட்டு சரிபார்க்கப்பட்ட ஒப்பந்தம் உங்களிடம் இருப்பதை உறுதிசெய்யவும். வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வது குறித்து முடிவு செய்ய ஒப்பந்த நிபந்தனைகளைப் பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.
- **மருத்துவ அறிக்கை மற்றும் தடுப்பூசி பதிவுகள்:** சில நாடுகளில் தொழில் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்காக சுகாதார நிலையை அல்லது தொழில் புரிதல் சார்ந்த மருத்துவ தகுதியை உறுதிப்படுத்துக் கொள்வதற்கான சான்றிதழ்களையும் தடுப்பூசிகளுக்கான சான்றுகளையும் அவசியாமாக்கியுள்ளன.
- **நிதி நிலைத்தன்மைக்கான சான்று:** சுற்றுலாப் பயணியாகவோ அல்லது கல்விக்காகவோ பயணம் செய்தால் நிதித் திறனை நிரூபிக்க வங்கி அறிக்கைகள் அல்லது அனுசரணையாளர்களின் கடிதங்கள் தேவைப்படலாம்.
- **அவசர தொடர்புகள் மற்றும் ஆவணங்களின் பிரதிகள்:** டிஜிட்டல் பிரதிகளை உங்கள் வசம் வைத்திருங்கள், அத்துடன் உங்கள் பயண ஆவணங்களின் டிஜிட்டல் அல்லது அச்சுப் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்து விட்டுச் செல்லுங்கள். பாதுகாப்பிற்காக அவசர தொடர்பு விவரங்களை எடுத்துச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன ஒரே ஒரு வழிமுறையாக இருக்க வேண்டும்

## ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?

ஒழுங்கற்ற புலம்பெயர்வு என்பது புலம்பெயர்வோரின் பிறப்பிடம், இடைமாறல் இடம் அல்லது சேருமிடம் சார்ந்ததாக உள்நுழைவதற்கு அல்லது வெளியேறுவதற்கு ஏதுவான சட்டங்கள், விதிமுறைகள் அல்லது சர்வதேச ஒப்பந்தங்களுக்கு புறம்பாக நிகழும் ஆட்களின் நடமாட்டத்தைக் குறிக்கிறது. சிலர் புலம்பெயர்வதற்குத் தேவையான தகுதிகள் இல்லாததால் அல்லது சட்ட செயன்முறைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததால் அல்லது ஆட்கடத்தல்காரர்களினால் பரப்பப்படும் தவறான தகவல்கள் காரணமாக ஒழுங்கற்ற புலம்பெயர்வுக்கு முயல்கின்றனர். மேலே விவரிக்கப்பட்ட ரமேஷ்ன் கதை ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வு பயணத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

2024 ஆம் ஆண்டில், இலங்கையில் ஒழுங்கற்ற புலம்பெயர்வு சம்பவங்கள் அதிகரித்ததுடன் இது ஒழுங்கற்ற வழிகளில் புலம்பெயர முயற்சிக்கும் தனிநபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் போக்கை எடுத்துக்காட்டுகின்றது. இது பெரும்பாலும் உயிருக்கு ஆபத்தான நிலைமைகள் மற்றும் சட்ட விளைவுகளை எதிர்நோக்க காரணமாக அமைந்துவிடுகின்றது.

கடல் மார்க்கமாக தமது நாட்டு மக்கள் ஒழுங்கற்ற முறையில் புலம்பெயர முயன்ற பல சம்பவங்களை இலங்கை அதிகாரிகள் அறிக்கையிட்டுள்ளனர். மே 2023 இல், இந்திய சமுத்திரத்தின் ஊடாக அவுஸ்திரேலிய எல்லையை அடைய முயற்சி செய்த 41 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய எல்லைப் படையால் தடுத்து நிறுத்தப்பட்டு பின்னர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எம் நாட்டின் ஊடகங்களில் இதேபோன்ற எண்ணற்ற சம்பவங்கள் அவ்வப்போது தொடர்ந்து தெரிவிக்கப்படுகின்றன. இந்த சம்பவங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வுடன் தொடர்புடைய அபாயங்களை எடுத்துக்காட்டுவதுடன் இதில் சுரண்டல், தடுப்புக்காவல் மற்றும் நாடுகடத்தலுக்கான சாத்தியக்கூறுகள் போன்றவையும் அடங்கும். இதனை வேறு விதமாக கூறுவதானால், புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறைகள் பற்றியும் அவர்களின் பயணம் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய பாதுகாப்பான மற்றும் ஒழுங்கான புலம்பெயர்வு வழிமுறையினை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது பற்றியும் அறியாதவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் அவர்கள் இவற்றை மறந்து தங்கள் இலக்குகளை அடைவதை நோக்கி மாத்திரமே பயணிக்கிறார்கள் என்பதையுமே இது எடுத்துக் காட்டுகிறது. பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான சில முக்கியமான தகவல்களைப் புரிந்துகொள்ள கீழே உள்ள தலைப்புகள் உங்களுக்கு உதவும். புலம்பெயர்வு தொடர்பான குற்றங்கள் உள்ளதுடன் இதில் பெரும்பாலும் புலம்பெயர்ந்தோர் குற்றவாளிகளுக்கு பலியாகின்றனர். அறியாமை காரணமாக புலம்பெயர்ந்தோர் பாதிக்கப்படுகின்றனர் என்பதுடன் அவர்களின் தமது சொந்த நாட்டின் மற்றும் அவர்கள் நுழைய முயற்சிக்கும் நாட்டின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறியதற்கான குற்றச்சாட்டுகளை எதிர்கொள்கின்றனர்.

## ஆட்கடத்தல் என்றால் என்ன?




- ஆட்கடத்தல் என்பது தேச எல்லைகளை ஒழுங்கற்ற முறையில் கடக்க ஆட்கடத்தல்காரர்களின் சேவைகளைப் பெறுவதற்காக அவர்களுக்கு பணம் செலுத்துவதை உள்ளடக்கியதாகும். இது ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராக செய்யப்படும் ஒரு சர்வதேசக் குற்றமாகும். புலம்பெயர்வோர் ஆட்கடத்தல்காரருக்கு பணம் செலுத்துவதன் மூலம் தானாக முன்வந்து தங்களைக் கடத்துவதற்கு ஒத்துழைக்கின்றனர். செல்லுபடியாகும் விசா இல்லாமல் சர்வதேச எல்லைகளைக் கடக்கும் பொருட்டு ஆட்கடத்தல்காரர்களின் உதவியைப் பெறுவதற்கு அவர்களை அணுகும் போதே தாங்கள் சட்ட விரோதமான முறையில் கடத்தப்படுவதற்கு ஆட்கடத்தல்காரரை அணுகுகின்றோம் என்று புலம்பெயர்வோருக்குத் தெரியும். சில நேரங்களில் கடத்தல் முயற்சியை வெற்றிகரமானதாக மாற்றிக்கொள்வதற்கு போலி ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது நாடுகளின் குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டங்களை மீறுவதன் மூலம் ஒரு நாட்டிற்கு அல்லது பல நாடுகளுக்கு எதிராகச் செய்யப்படும் குற்றமாகும்.

மேற்படி கலந்துரையாடப்பட்ட ரமேஷின் சம்பவத்தைப் பொருத்தமட்டில், ஐரோப்பாவிற்குள் நுழைய தனது குடும்பத்தின் வீட்டை அடமானம் வைத்து ஆட்கடத்தல்காரருக்கு பணம் கொடுத்தபோது அவர் தனது பயணத்தைப் பற்றி அறிந்திருந்தார். அவர் தானாக முன்வந்து ஆட்கடத்தல்காரரின் சேவைகளை நாடினார். பெரும்பாலும், புலம்பெயர்வோர் சிறந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் குடியுரிமை வாக்குறுதிகளால் ஆட்கடத்தல்காரர்களால் ஈர்க்கப்படுகிறார்கள். சம்பந்தப்பட்ட ஆட்கடத்தல்காரரின் உதவியைப் பயன்படுத்தி அபிவிருத்தியடைந்த நாடுகளை அடைந்தவர்கள் பற்றிய உண்மைக்கு மாறான வெற்றிக் கதைகளையும் அவர்கள் கிராமங்களில் கேள்விப்படுகின்றார்கள்.

## புலம்பெயர்வின் வசீகரம்: சிறந்த வாழ்க்கையைத் தேடுதல்

உலகமயமாக்கல் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு காணப்படும் வாய்ப்புகள் காரணமாக, குறிப்பாக இளைஞர்கள் வெளிநாடுகளில் கல்வி, தொழில் மற்றும் வாழ்க்கை முறை வாய்ப்புகளை ஆராய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும், புலம்பெயர வேண்டிய அவசரமானது சில சந்தர்ப்பங்களில் அவசரமான மற்றும் தகவல் அறியாத முடிவுகளுக்கு வழிவகுப்பதுடன் இந்த நிலையை அறிந்துகொள்ளும் ஆட்கடத்தல்காரர்கள் எளிதான பயணம், அதிக ஊதியம் தரும் வேலைவாய்ப்புகள் மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சட்டப்பூர்வ அந்தஸ்து போன்ற பொய்யான வாக்குறுதிகளை புலம்பெயர்வதற்கு ஆர்வமாக இருப்பவர்களுக்கு வழங்குவதன் மூலம் நிலைமையைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, இத்தகைய ஏமாற்று வழிமுறையாக முன்வைக்கப்படும் கவர்ச்சிகரமான விடயங்கள் பெரும்பாலும் சுரண்டல், கட்டாய உழைப்பு மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் அல்லது செல்ல வேண்டிய நாட்டின் குடிவரவு சட்டங்களை மீறியதற்கான சிறைத்தண்டனை போன்றவற்றிற்கும் கூட வழிவகுக்கும்.

## எதிர்காலத்தில் புலம்பெயர்வதற்கு விரும்புவோருக்கான ஆலோசனை

- நீங்கள் ஒரு ஒழுங்கற்ற புலம்பெயர்வோராக மாறுவதற்கு வாய்ப்புள்ளது:
- போலி ஆவணங்களுடன் அல்லது செல்லுபடியாகும் விசா இல்லாமல் ஒரு நாட்டிற்குள் ஒழுங்கற்ற முறையில் நுழைகிறீர்கள்.
- நீங்கள் ஒரு வருகை விசா மூலம் ஒரு நாட்டிற்குள் நுழைந்து, தொழில் விசா இல்லாமல் சேருமிட நாட்டில் தொழிலில் ஈடுபடுகிறீர்கள்.
- விசா காலாவதியான பிறகு சென்றடையும் நாட்டில் நீங்கள் அதிக காலம் தங்குகிறீர்கள்.
- உங்கள் நுழைவுக்கு அனுமதிக்கப்பட்டதைத் தவிர வேறு விடயங்களில், ஈடுபடுகின்றீர்கள். உதாரணம்: மாணவர் விசாவுடன் நுழைந்து வேலையில் ஈடுபடுகிறீர்கள்.

## நீங்கள் ஒழுங்கற்ற புலம்பெயர்வு வழிமுறையில் செல்லும்போது என்ன நடக்கும்?

ஒழுங்கற்ற புலம்பெயர்வைத் தேர்ந்தெடுப்பது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் இதில் பின்வருவன அடங்கும்:

- உயிருக்கு ஆபத்தான பயணங்கள்.
- ஆட்கடத்தல்காரர்களால் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுதல்.
- நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படுதல் மற்றும் சேருமிட நாட்டின் குடிவரவுச் சட்டங்களை மீறியதற்காக சிறைத்தண்டனை போன்ற சட்ட ரீதியான பாதக விளைவுகள்.
- பணத்தை இழந்துவிடுதல்.
- குடும்பத் தொடர்பினை இழந்துவிடுதல் / தனிமைப்படுதல் மற்றும் மிக மோசமான சூழ்நிலைகளில் உயிர் இழப்பு.
- ஆட்கடத்தல்காரர்கள் பயணத்தின் இடை நடுவில் உங்களைக் கைவிடலாம்.
- பயண ஆவணங்களை பறிமுதல் செய்தல் மற்றும் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல்.
- சொந்த நாட்டில் விட்டுச் சென்ற குடும்பம், கடன் சுமையின் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும். சில சமயங்களில் கடனை சரியான நேரத்தில் செலுத்தாவிட்டால், கடன் கொடுத்தவர்கள் குடும்பத்திற்கு பிரச்சனையை உருவாக்கலாம்.
- புலம்பெயர்வோர் ஒழுங்கற்ற பயணத்தைத் தொடங்கிய பின்னர் ஆட்கடத்தல்காரர்கள் அவ்வப்போது பணத்தை உங்களிமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். அவர்கள் புலம்பெயர்ந்தவரை வலுக்கட்டாயமாகவோ அல்லது அச்சுறுத்தல் விடுத்தோ பணம் கொடுக்குமாறு கோருகிறார்கள்.



## நினைவில் கொள்ள வேண்டிய சில விரைவான குறிப்புகள்:

### புறப்படுவதற்கு முன்னர்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பைத் தேடும் போது, ஆட்சேர்ப்பு நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியமானதாகும். இது பொறுப்புக்கூறலையும் ஒழுங்குறுத்தல் தரநிலைகளைப் பின்பற்றுவதையும் உறுதி செய்கிறது. விரைவாக விசாக்களை பெற்றுத்தருவதாக உறுதியளிக்கின்ற மற்றும் இலங்கை சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமான போலி ஆவணங்களைத் தயாரித்துத் தருவதாகவும் கூறுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களாகத் தோன்றும் ஆட்கடத்தல்காரர்களை நம்புவதைத் தவிர்க்க வேண்டும். மோசடி நடைமுறைகளுக்கு எதிராக் உங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நிறுவனம் அல்லது விசா செயலாக்க முகவரால் உறுதியளிக்கப்பட்ட விசாவின் செல்லுபடித் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எப்போதும் சம்பந்தப்பட்ட தூதரகம் அல்லது உயர் ஸ்தானிகராலயத்தைத் தொடர்பு கொள்ளவும். விசா செயன்முறை அல்லது குறிப்பிட்ட விசா வகைகள் குறித்து இந்த நிறுவனங்களுடன் சரிபார்ப்பது உங்களுக்கு தெளிவை வழங்குவதுடன் உங்கள் நலன்களைப் பாதுகாக்க உதவும். இது பாதுகாப்பான புலம்பெயர்வு வழிமுறையில் ஈடுபடுவதற்கு உங்களுக்கு உதவும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதலுக்காக உங்கள் பிரதேச செயலகத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு உத்தியோகத்தரையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

### புறப்படுதல்:

- உங்கள் கடவுச்சீட்டு, விசா/தொழில் அனுமதிப்பத்திரம், விமான பயணச் சீட்டு மற்றும் தொழில் ஒப்பந்தம் உள்ளிட்ட அனைத்து மூல ஆவணங்களையும் எடுத்துச் செல்லுங்கள்.
- உங்கள் புலம்பெயர்வு/வேலைவாய்ப்பு தொடர்பான ஆவணங்களின் பிரதிகளை உங்கள் குடும்பத்தினரிடம் கொடுத்துவிட்டுச் செல்லுங்கள். அத்துடன் ஸ்கேன் செய்யப்பட்ட பதிப்புகளை டிஜிட்டல் முறையில் எடுத்துச் செல்லுங்கள். இந்த ஆவணங்களின் வரிசையில் தொழில் ஒப்பந்தம், கடவுச்சீட்டு, தொழில் சார்ந்த வரையறைகள், விசா, தொழில் வழங்குனரின் விவரங்கள், இலங்கை வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் விவரங்கள் போன்றவை இருக்கலாம்.
- அவசர தொடர்பு இலக்கங்களை கொண்டு செல்லுங்கள். அவற்றில் சேரும் நாட்டில் உள்ள இலங்கை தூதரகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இலங்கையில் உள்ள உறவினர் அல்லது நண்பர் மற்றும் சேரும் நாட்டில் வசிப்பவர் ஆகியோரின் தொடர்பு இலக்கங்கள் போன்றவை அடங்கலாம்.
- உங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலிலும் மற்றும் தொழில் இடத்திலும் மட்டுமே வேலை செய்யுங்கள். இலங்கையை விட்டு வெளியேறிய பிறகு சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவரை மாற்றுவது உங்களை ஆபத்தில் ஆழ்த்தக்கூடும் என்பதுடன் அது உங்கள் உழைப்பைச் சுரண்டுவதற்கு வழிவகுக்கும். சரியான ஆவணங்கள் இல்லாமல் தொழில் வழங்குபவர்களை மாற்றாமல் கவனமாக இருங்கள்.
- உங்கள் குடும்பத்தினருடன் தொடர்பில் இருங்கள்.



## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் (SLBFE) பதிவுசெய்து கொள்ளுதல்.

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சட்டத்தின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக புலம்பெயரும் இலங்கையர்கள் SLBFE இல் பதிவு செய்து கொள்ளுதல் கட்டாயமாகும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகப் புறப்படும்போது SLBFE இல் பதிவு செய்வது விரும்பினால் செய்யலாம் அல்லது விட்டுவிடலாம் எனும் ஒரு விருப்பத்தேர்வு அல்ல. இலங்கை சட்டத்தின்படி அது கட்டாயமாகும். SLBFE இல் பதிவு செய்யும் செயன்முறையை மீறி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காகச் செல்ல யாராவது உங்களை ஊக்குவித்தால், அது உங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தயாராக வேண்டும் என்று உங்களுக்கு கூறும் எச்சரிக்கையாகக் கருதப்படலாம். வருகை விசாவில் சென்று வெளிநாடுகளில் வேலை தேடுபவர்களுக்கு SLBFE இல் பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வருகை விசாவில் புறப்படுவதற்கு முன்பு SLBFE பணியகத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் இந்த விவரங்களைப் பெறலாம்.

பாதுகாப்பான புலம்பெயர்வு பற்றி மேலும் அறிந்துகொள்வதறகாக, 077 441 0086 என்ற இலகத்தின் வாயிலாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினை (IOM) தொடர்பு கொள்ளவும்.

IOM
UN MIGRATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மலை கிராமத்தில் மாவீரர்களின் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. மாணவிகளின் நடன நிகழ்வும் மாவீரர் தொடர்பான நினை வுப்பகிர்வும் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாவீரர் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். (ச-19)

**VALIKAMAM WEST PRADESHIYA SABHA, CHULIPURAM.**
**INVITATION FOR BIDS (IFB) – COUNCIL FUND 2025**

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
2. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025.11.26 until 2025.12.10 from 09:00 hrs to 15:00 hrs.
3. Qualification requirements are indicated in Section 4 of the Procurement document. Additional details are provided in Schedule (Section 5) for SBD 3 Documents.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of road construction/Building construction for grade mentioned in the table below.
 " Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million,"
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram (T.P No: 021 225 0144, Fax No: 021 225 0144) during the period from 2025.11.26 until 2025.12.10 from 09:00 hrs to 15:00 hrs. upon payment of a non-refundable fee as mentioned in the table. The method of payment will be by cash
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Local Authority Procurement Committee, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram at or before 10.00 hrs, 2025.12.11 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at Head office, Valikamam West Pradeshiya Sabha, Chulipuram commencing at 10.00 am on 2025.12.03
8. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | 2025.11.26 until 2025.12.10 |
| Pre-Bid Conference | At 10.00 A.M on 2025.12.03 |
| Closing and Opening of Bids | At 10.00A.M on 2025.12.11 |

| S No | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee | Validity Period days | Bid Validity Date | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | Bid Security Amount | Bid Security Validity Date |
| 01 | Construction of Chulipuram sub office area roads ( Nelliyan road branch lane, Pallasuddi kaya road 2nd lane, Pokkankaladdy branch lane, Vellavaaikal lane) NP/14/41(17)/02/CF/18/2025 | 6.551 | 84 Days | C8 & Above Roads | 3000.00 | 77 days | 26.02.2026 | 66,000.00 | 26.03.2026 |
| 02 | Renovation of Chulipuram sub office area Roads - Maintenace (Vadaliyadaippu road (Balance work), Pandaveddai 11th lane, Periyathampiran road) NP/14/41(17)/02/CF/19/2025 | 4.920 | 60 Days | C8 & Above Roads | 3000.00 | 49 Days | 29.01.2026 | 50,000.00 | 26.02.2026 |
| 03 | Renovation of Vaddukoddai & Araly sub office area Roads (Vaddu Kaali amman kovil Road , Araly Murugamoorthy Kovil lane – Balance work) NP/14/41(17)/02/CF/20/2025 | 4.910 | 75 Days | C8 & Above Roads | 3000.00 | 49 Days | 29.01.2026 | 50,000.00 | 26.02.2026 |
| 04 | Construction of Chankanai sub office area roads ( Bharathi road branch lane, Maluvai road 3rd lane, Pattinasabai road 1st lane) NP/14/41(17)/02/CF/21/2025 | 3.550 | 60 Days | C9 & Above Roads | 3000.00 | 49 Days | 29.01.2026 | 36,000.00 | 26.02.2026 |

Chairman,
Local Authority Procurement Committee ,
Valikamam West Pradeshiya Sabha,
Chulipuram

2025.11.26

# தீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம், நவ.26

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாலை 4.30மணிக்கு பூஜைகளும் மாலை 6மணிக்கு கார்த்திகை தீப உற்சவமும் இடம்பெறும். சமய தீட்சை பெற விரும்பும் அடியவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டு சமய தீட்சையைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச-41)





தமிழின விடுதலைக்காக களமாடி சந்தனப்பேழைகளில் உறங்கும் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளிப்பு நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை சுப்பர்மடத்தில் இடம்பெற்றது. (ச-100)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், நவ.26

தீவக வலயத்துக்குட்பட்ட வகை II மற்றும் வகை III பாடசாலைகளின் அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி சுருவில் றோ.க.த.க. பாடசாலை வகை III, மண்டைதீவு மகாவித்தியாலயம் வகை II, தம்பாட்டி அ.த.க. வித்தியாலயம் வகை II ஆகியவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 3 வருடங்களாவது சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டிருக்கவேண்டும். வகை II பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை தரம் II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இலங்கை அதிபர் சேவை தரம் II இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து மட்டும் அல்லது தெரிவுகள் எவையும் இடம்பெறாதவிடத்து மட்டும் இலங்கை அதிபர் சேவை தரம் III இனைச் சேர்ந்தவர்களது விண்ணப்பம் கவனத்தில் கொள்ளப்படும்.

வகை III பாடசாலைகளுக்கு இலங்கை அதிபர் சேவை வகுப்பு III இனைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களைத் தீவகக் கல்வி வலய நிர்வாகப் பிரிவில் பெற்று பூரணப்ப டுத்தி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், குறிகாட்டுவான் வீதி, வேலணை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.11.2025
புதன்கிழமை

# புதன் பொய்கை

ஒவ்வொரு நாளும் வித்தியாசமான ஒன்று. ஒவ்வொரு நாளையும் ஒரே மாதிரியாக பார்த்தால் நீங்கள் குருடரே.


\- பௌலோ கொய்லோ



காலங்காலமாகவே ஈழத்தமிழர்களின் கண்ணீராலும் செந்நீராலும் தன்னை நிரப்பிக்கொண்டிருந்த நிலையில், ஒரு சின்னஞ்சிறு தீவில் பல அதிசயங்களைத் தனிமனிதராக நிகழ்த்திய விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள் இன்று!

# மேதகு 71

## தமிழினத்தின் தாயுமானவன்



ஈன்றெடுத்த பெற்றோரை, உடன் பிறந்தவர்களை, உற்றார் உறவினர்களை,நண்பர்களை உதறித் தள்ளிவிட்டு தமிழீழ விடுதலைக்காக, தமிழ் மக்களைக் காப்பதற்காக எண்ணற்ற போராளிகள் எந்தத் தைரியத்தில் தங்களின் உயிரைத் துறக்க துணிகின்றனர்?

அதிலும், இந்த நாளில், இந்த நேரத்தில், இந்தக் குறிப்பிட்ட இடத்தில் தங்களது உயிரைத் துறக்கவேண்டுமென வரும் கட்டளைக்கு காத்திருந்து அதற்காகப் போட்டிபோட்டுக்கொண்டு வீரச்சாவை விரும்பித் தழுவ முன்வந்து நிற்கும் மனநிலையை அவர்களுக்கு எது உருவாக்குகிறது? காலங்காலமாகவே ஈழத்தமிழர்களின் கண்ணீராலும் செந்நீராலும் தன்னை நிரப்பிக்கொண்டிருந்த இந்து மாகடல் எனும் தமிழர் கடலின் நடுவே அமைந்துள்ள ஒரு சின்னஞ்சிறு தீவில் இந்த அதிசயத்தைத் தனி மனிதராக நிகழ்த்திய அவர் யார்? அவருக்கும், அவரின் சொல்லுக்கும் ஏன் இத்தனை மரியாதை ?

இருக்கிறாரா? இல்லையா? என உறுதியாகக் கூற முடியாத அந்த மனிதனை எதன் பொருட்டு உலகத் தமிழர்கள் தெய்வம் போல கொண்டாடித் தீர்க்கிறார்கள்?

தீவிரவாதி பயங்கரவாதி என எதிர்ப்பாளர்களால் விமர்சிக்கப்படும் அவரை இன்னொரு பக்கம் ஒழுக்கசீலர், நேர்மையாளர், அறவாழ்வு வாழ்ந்தவர் என உலகமே கண்டு வியந்துகொண்டிருக்கிறது.

இலங்கையில் அமைதியைக் கொணர விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே நோர்வே அரசு சமாதானம் பேசிவந்த போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்த ஒப்பந்த காலம். தமிழீழ இனப்படுகொலைக்கான களத்தை சத்தமில்லாமல் சிங்கள அரசு தயார்படுத்திக்கொண்டிருந்தது.

அந்த காலகட்டத்தில்தான் சுனாமி எனும் ஆழிப் பேரலை தென்னாசியாவைப் பதம் பார்த்தது. குறிப்பாக, கடல் நீரையொட்டி இருந்த தமிழர் தாயகமான வடக்கு,கிழக்கில் ஏறத்தாழ 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் உயிர்கள் பறிபோயின. வல்லாதிக்க நாடுகளின் முழு உதவிகளைப் பெற்ற வளரும் நாடுகள் கூட மீட்புப்பணிகளை நெறிப்படுத்த முடியாமல் திணறின. என்ன செய்வதென அறியாத இந்தியா போன்ற நாடுகள் முதல்நாள் வெறுமனே சோக இசையை ஒலிபரப்பிக்கொண்டிருந்தன.

அப்போது, தெற்காசியக் கண்டத்தில் முதல்முதலாக ஆழிப்பேரலை பேரிடர் மீட்புப் பணியைத் தொடங்கியது விடுதலைப் புலிகள் இயக்கம் தான். "இறைவனை மறந்ததால் ஏற்பட்ட தெய்வக்குற்றம்" என கொழும்பு வானொலி தன் மூடத்தனத்தை ஒலி பரப்பிக்கொண்டிருந்தபோது, "ஓலத்துடன் ஒப்பாரியெழுப்புவதால் ஒன்றும் மாறாது, தேசத்தை மீட்க களப்பணியே தேவை" என்றது புலிகளின் குரல் வானொலி. அது தான் பிரபாகரனின் தலைமை. நம்பிக்கை துளிர்க்க அடுத்தடுத்த தமிழீழ மானுடம் கொஞ்சம் கொஞ்சமாக நிமிரத் தொடங்கியது. சின்னஞ்சிறிய தமிழர் தாயகத்தின் துயர் துடைக்க உலகம் முழுவதும் பரவி இருந்த புலம்பெயர் தமிழர்கள் தங்களது பங்களிப்பை அளித்தனர். அடுத்தவர்களுக்காகக் காத்திராமல் தாயைப்போன்ற தலைவனின் வழிநடத்தலில் போராளிகள் அவசரகட்ட நடவடிக்கைகளில் நகர்த்தப்பட்டிருந்தனர். பாதிக்கப்பட்ட கடற்கரையோரப் பிரதேசங்களில் மருத்துவப்பிரிவுப் போராளிகளின் தொற்றுநோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கை பாதுகாப்புப் பணிகளை செழுமைப்படுத்தினர்.

மரணித்த உயிர்களை நாறும் பிணங்களாக அருவருப்போடு எண்ணிக் கணக்கிட்ட ஏனைய நாடுகளுக்கு மத்தியில், நாடாக அங்கீகரிக்கப்படாத தமிழீழமும் அதன் தலைமையும் அவர்களுக்கு உரிய இறுதி மரியாதையை செய்தது. வலிகளை மட்டுமே கண்ட ஈழத்தமிழினம், தங்களை அடக்கி ஒடுக்கி படுகொலை செய்த சிங்கள தேசத்தின் ராணுவத்திற்கும் நட்புக்கரம் நீட்டியது. சிங்கள மக்களுக்கு உதவியது என்றால் நம்மால் நம்ப முடியுமா?. அதனை செய்து மானிதாபிமானத்தின் உச்சத்தைத் தொட்டார் பிரபாகரன். ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக அடுத்தகட்ட வாழ்க்கைக்குத் தம்மைத் தயாராக்கினர். சுனாமி அடித்த சில மாதங்களுக்குள்ளேயே தமிழர்கள் அதிலிருந்து மீள தேவையான அனைத்து ஆக்கப்பூர்வமான செயல்களையும் விடுதலைப் புலிகள் நடைமுறைப்படுத்தினர்.

முதற்கட்டமாக பெற்றோரை இழந்த சிறார்களுக்காக சிறுவர் இல்லங்கள் திறக்கப்பட்டன. ஆழிப்பேரலையை நேரடியாகக் கண்ட சிறார்களின் உள நல மேம்பாடு கருதி, மனவளப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. முழுநீளக் கார்ட்டூன் படங்கள் குறுகிய காலத்திலேயே தமிழிற்கு மொழியாக்கம் செய்யப்பட்டு, பிள்ளைகளுக்குப் பயன்படக்கூடிய சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அனைவரும் நீச்சல் ஆற்றல் உள்ளவர்களாக இருந்திருந்தால் உயிரிழப்புகளை ஓரளவு குறைத்திருக்கலாம் என்ற விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் விருப்பம், வள்ளிபுனம் என்ற பகுதியில் செயல்வடிவம் பெற்றது. வளர்ந்த நாடுகளில் இருப்பது போன்ற மேம்பட்ட வசதிகளுடன் கூடிய நீச்சல் தடாகம் திறந்துவைக்கப்பட்டது.

மின்சாரம் கூட தடை செய்யப்பட்டிருந்த புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள், உடலளவில் வளர்ச்சி குன்றி இருந்த குழந்தைகளுக்கென சத்தான உலகத் தரம் வாய்ந்த உணவு வகைகள் வந்தடைந்தன. நாட்டு மக்களின் விருப்பங்களை, கனவுகளை, எதிர்காலத்தை மட்டுமே சிந்தித்து, வாழ்ந்தவராகவே அந்தமக்களால் மதிக்கப்படும் தலைவரின் அடுத்த கனவும் தனது நாட்டின் இளம் தலைமுறையை பற்றியதாகவே இருந்துள்ளது.

அப்போது, தமிழர் தாயகப் பகுதியில் இயங்கிவந்த பள்ளிகளில் கல்வியானது ஒவ்வொருவருக்குள்ளும் மறைந்துள்ள ஆற்றலை இனங்கண்டுகொள்ளவோ, வளர்த்தெடுக்கவோ உதவுவதில்லை என நினைத்த அவர், அறிவியற் கழகம் ஒன்றை உருவாக்கினார். விசுவமடு என்ற பகுதியில் மிக விரைவாக பிரமாண்டமாக கட்டப்பட்ட அந்த மையத்தில் இலத்திரனியல் கணினியம், இயந்திரவியல், பௌதீகவியல், ஆங்கிலம் என வெவ்வேறு துறைக[illegible] துறைசார் அறிஞர்களின் வழிநடத்தல்களுடன் கற்பிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டின் இறுதியில், ஐ.நா., சபை உலக மொழிகளில் விரைவில் அழியவுள்ள மொழிகளின் பட்டியலில் தமிழை இணைத்து ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்தத் தகவல் பிரபாகரனின் தலைமையகத்தை அடைந்ததுதான் தாமதம். மானுடத்தின் ஒன்றுகூடல் எனும் நிகழ்வை ஒருங்கிணைத்தார். பின்னர் உலகின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து தமிழின மொழி பண்பாட்டு ஆளுமைகளை, அறிவர்களை தமிழீழ நடைமுறை அரசின் தலைநகரான கிளிநொச்சிக்கு அழைத்து சந்தித்தார். அவர்களுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், பொறியியல், மருத்துவம், கட்டடவியல், சட்டம், கணக்கியல், அறிவியல், வரலாறு, மானுடவியல், தொல்லியல் என் பல்வேறு துறைசார்ந்த சொற்களை தமிழாக்கம் செய்து, சொற்களஞ்சியமாக உருவாக்க ஆணையிட்டார். இதற்காக அறிவர் குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழு அளித்த சொற்களஞ்சியம் இன்று உலகின் பல்வேறு பகுதிகளில் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.


இனிவரும் காலம் தொழில்நுட்ப யுகத்தால் மட்டுமே வழிநடத்தப்படும் என கணித்த தமிழீழத் தேசிய தலைவர் பிரபாகரனின் தொலைநோக்குப்பார்வை, கன்னித் தமிழை கணினி மொழிக்கு ஏற்ப வடிவமைக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்த வைத்தது.உலகின் பல பாகங்களிலுமிருந்த பல கணினி வல்லுநர்கள், தமிழ் வல்லுநர்களை சந்தித்தார். தமிழிற் கணினி பற்றியும் மிகவும் ஈடுபாட்டுடன் கலந்துரையாடினார். தமிழும் தமிழர் சார்ந்த எல்லா விடயங்களுமே அங்கே அலசப்பட்டன. அதன் பயனாய், ஆதமி போன்ற மென்பொருட்கள் உருவாக்கப்பட்டன. அடுத்தகட்ட வளர்ச்சியாக, தமிழ் விசைப்பலகைகள் உருவாக்கப்பட்டன. இதன் விளைவாய், நேரடியாகவே தமிழைக் கணினியில் உள்ளீடு செய்யும் வசதி ஏற்பட்டது. உலகளவில், கணினி பயன்பாட்டு மொழியில் தமிழ் இன்று நிலைத்திருப்பதற்கும் ஈழத்தமிழர்களை வழிநடத்திய அவரது மொழிப்பற்று முதன்மைப் பங்கு வகித்தது.

இதுவரை உலகில் தோன்றிய போராளிகளிலேயே அதிகம் பேசாதவராக அறியப்படும் பிரபாகரன் ஆற்றல்மிகுந்த செயற்பாடுகளினூடாகச் சிந்தனையை செயற்படுத்திய முறையிலேயே தன்னை நிலைப்படுத்திக்கொண்டார். 30 ஆண்டுகால அவரது போராட்ட வாழ்வை 'தமிழினத்தின் தன்னெழுச்சிக் காலம்' எனலாம்.

பத்து மாதம் ஒரு பிள்ளையைச் சுமந்து ஈன்றெடுப்பவள் தாய் ஆகின்றாள். அவளது தாய்மை அவள் ஈன்றெடுத்த பிள்ளைக்கு என்ன தேவை என்பதை உணர வைத்தது. இது இயற்கையான பிணைப்பு. ஒட்டுமொத்த தமிழினத்தையும் தனது இதயங்களில் சுமந்து அவர்களின் எதிர்காலத்திற்காகத் தன் முழு வாழ்நாளையும் அர்ப்பணித்து நின்ற பிரபாகரன், இங்கு அந்த தாய்க்கும் மேலானவராக மாறி நிற்கிறார். அவரது தலைமையும் தாய்மை போன்றதுதான். அதனால்தான் அவரை உலகத் தமிழினம் தாயுமானவராக போற்றுகிறதோ என்னவோ ? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதைப்பை விதைகளில் ஏற்படும் முறுக்கங்கள்



## வலியை அலட்சியம் செய்யாதீர்கள்!

மருத்துவர் பா.சயந்தன்
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்.போதனா மருத்துவமனை

விதை முறுக்கப்படுத்தல் ஒரு மருத்துவ அவசர நிலையாகும். கீழ்வயிற்று வலி, குழந்தைகளில் பொதுவாகக் காணப்படும் குறைபாடாக இருந்தாலும், சில சமயங்களில் இது ஒரு ஆபத்தான நோயாக இருக்கலாம்.

**விதை முறுக்கப்படுதல் என்றால் என்ன?**
விதை முறுக்கப்படுதல் என்பது விந்தணுக்குழாய் தானாகவே முறுக்கப்படுத்தல் மூலம் விதைக்கு இரத்தம் செல்லும் பாதை தடுக்கப்படுவதால் ஏற்படுகிறது. இது மிகுந்த வலியையும், வீக்கத்தையும் ஏற்படுத்தும். சிகிச்சை தாமதமாகும்போது, அந்த விதையை நிரந்தரமாக இழக்கும் அபாயம் உள்ளது.

**ஆரம்பத்திலேயே கண்டறிதல் ஏன் முக்கியமானது?**
விதை முறுக்கப்படுத்தல் திடீர் என நடைபெறக்கூடிய ஒன்றாகும். அத்துடன் அறிகுறிகள் தோன்றிய 4 முதல் 6 மணி நேரத்திற்குள் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் ஏற்படும் சேதம் சரிசெய்யமுடியாததாக மாறலாம். இதனை முன்கூட்டியே உணர்ந்து அவசர அறுவைசிகிச்சை மேற்கொண்டால், விதையைக் காப்பாற்றி, உங்கள் குழந்தையின் இயல்பான வளர்ச்சியையும் எதிர்கால கருவளத்தையும் உறுதிசெய்யலாம்.

**கவனிக்க வேண்டிய அறிகுறிகள்**

- ஒருபுறத்திலுள்ள விதையில் திடீரெனக் கடுமையான ஏற்படும் வலி
- விதைப்பையில் வீக்கம் அல்லது சிவப்பு
- வயிற்று வலியுடன் வாந்தி அல்லது மயக்கம்
- உயர்ந்த நிலையில் காணப்படும் விதைப்பை அல்லது விதைப்பை இயல்பு இடத்தைவிட்டு விலகி காணப்படுதல்
- அசைவின்போதும் அல்லது தொடுதலின்போதும் அதிகமாகும் வலி

குழந்தை மற்றும் பிள்ளை பருவத்தில் உள்ளவர்கள் தங்களுடைய குறைபாடுகளைத் தெளிவாகக் கூற இயலாது. எனினும் அவர்கள் மிகவும் அழுதல், நடக்க மறுத்தல் போன்ற பொதுவான அசௌகரியமான நிலையைக் காண்பிப்பார்கள். இந்த அறிகுறிகள் தோன்றும் குழந்தையை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டும்.

**என்ன செய்யவேண்டும்?**
விதை முறுக்கப்படுதல் என நீங்கள் சந்தேகித்தால் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனை அல்லது அவசர பிரிவிற்குச் செல்லுங்கள். நேரம் மிக முக்கியமானது - வலி தானாகக் குறையும் என்று காத்திருப்பதோ அல்லது வீட்டு மருத்துவ முறைகளை முயற்சிப்பதோ விதையை நிரந்தரமாக இழப்பதற்குக் வழிகோரும்.

**மருத்துவ அவசரநிலை**
வலி ஆரம்பித்த 6 மணி நேரத்திற்குள் சிகிச்சை பெறும்போது மட்டுமே விதையை காப்பாற்ற முடியும். சிகிச்சை தாமதமானால், அந்த விதை செயல் இழந்தால் அகற்ற வேண்டிய நிலை உருவாகும்.

**பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியவை:**
விதைப் பகுதியில் வலி ஏற்பட்டால் தயக்கமின்றி தெரிவிக்கவேண்டும் என்பதை சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.
விளையாட்டின் போது பாதுகாப்பு உபகரணங்களை அணிய ஊக்கப்படுத்துங்கள்.
கீழ் வயிற்று வலி சில நேரங்களில் விதை முறுக்கப்படுதலிற்கு அறிகுறியாக இருக்கக்கூடும் என்பதை நினைவில் வையுங்கள்.
ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானது உடனடியாக எடுக்கப்படும் மருத்துவ நடவடிக்கையானது குழந்தையின் எதிர்காலத்துக்கும் நலனுக்கும் முக்கியமானது. இது சம்பந்தப்பட்ட விழிப்புணர்வானது பாரதூரமான விளைவுகளைத் தடுப்பதற்கும் உரிய நேரத்தில் சிகிச்சை அளிப்பதற்கும் முக்கியமானது.
மேலும் தகவலுக்கு அல்லது சந்தேகங்களுக்கு, உங்கள் அருகிலுள்ள மருத்துவமனை அல்லது சிறுவர் அறுவைச்சிகிச்சை பிரிவை தொடர்புகொள்ளுங்கள்.

## அகல் விளக்குகளே...



கார்த்திகை மாதம்
கார்கால மேகம்
கரிகாலன் வீரம்
கதை கூறும் தேசம்...

வானமகள் நீர்த்துளிகள்
கானம்சேர் ஆசீர்வாதம்
தானத்தில் உயிர் உன்னதம்
தரணியில் தனித்துவம்.

காத்திருக்கும் கல்லறைகள்
கரங்குவிக்கும் உறவுகள்
கதறல்கள் விண்ணைச்சாடும்


வளமான வாழ்வை விடுத்து
நம்மினத்தின் நல்வாழ்வுக்காய்
களமாடிப் படைவென்று
உளமார சாதித்தீர்

வெங்களம்தனிலே
செங்குருதி சிந்தி
இன்னுயிர் ஈந்த
எம்முயிர் வீரர்களே...

அறிதுயில் கொள்கின்ற
அன்புச் செல்வங்களே
ஆர்ப்பரிக்கும் உள்ளத்தின்
அகல்விளக்கானீர் நீங்களே..

வித்தாகிய நீங்கள்
விழுதாகிய முத்துக்கள்
சொத்தாகிய உங்கள்
சொல்லரிய வீரம்
போற்றுகின்றோம் பொழுதெல்லாம்

திருமதி.கிருஷ்ணவேணி சிங்கராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வாக்குறுதிகளுக்கு அமைய அரசியற் கைதிகளை விடுவியுங்கள்

## அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்து

**யாழ்ப்பாணம்,நவ.26**

**தற்போதைய ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைவாக, அனைத்து அரசியல் கைதிகளையும் உடன் விடுவித்து, தமிழ் மக்களின் அரசியல் கௌரவத்தையும், கொடுத்த வாக்குறுதியையும் நிறைவேற்ற வேண்டும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

ஜனாதிபதி தமிழர்களுக்குக்கொடுத்த அரசியல் வாக்குறுதியை நிறைவேற்றுவதை விடுத்து காலத்தை இழுத்தடிப்புச் செய்வது, அரசியல் வாக்குறுதிக் கொலையாகும். இதையே கடந்த கால ஆட்சியாளர்களும் செய்தனர். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும்.

தற்போதைய அரசியற் கைதிகள் அனைவரும் தண்டனைக் காலத்தைவிட அதிகமான காலத்தைச் சிறைகளுக்குள் கழித்து விட்டனர். இவர்களுடன் சேர்ந்து இவர்களது குடும்பங்களும் தண்டனையை அனுபவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

உதாரணமாக ஆனந்த சுதாகரன் கடந்த 17 வருடங்களாக சிறையில் இருக்கின்றார். ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வதன் மூலம் அவரது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைப் பாதுகாக்கமுடியும். தமிழர் தேசமெங்கும் மாவீரர் துயிலும் இல்லங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு சுடர் ஏற்றுவதற்காக ஆயத்தப்பட்டு கொண்டிருக்கும் இவ்வேளையில், அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்த அரசியற் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்துவோம்- என்றுள்ளது. (க-இ)

# தமிழரசுக் கட்சியின் கிளை அலுவலகம் மன்னாரில் திறப்பு

மன்னார், நவ.26

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை அலுவலகம் கட்சியின் மன்னார் மாவட்டத் தலைவர் ப.ஜே.குமார் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் ஆகியோர் அலுவலகத்தை திறந்தனர். நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், கட்சியின் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-41-56)




## நகராட்சி மன்றம்,சாவகச்சேரி
## குத்தகை மீள்கேள்வி அறிவித்தல் - 2026

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட, கீழ் குறிப்பிடப்படுகின்ற இறைச்சிக் கடைகள், பேருந்து தரிப்பிடத்தில் விளம்பரப்பலகைகள் காட்சிப்படுத்தல் என்பனவற்றுக்கு 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 திகதி தொடக்கம் 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றது.

01. குத்தகைக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 2025.11.26 ஆம் திகதி தொடக்கம் 2025.12.09 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 2025.12.10 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணி

கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2025.12.10 ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.00 மணி

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டுதனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 2025.12.10 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2026 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகள் மற்றும் பேருந்து தரிப்பிடத்தில் விளம்பரப்பலகை காட்சிப்படுத்துதல் என்பவற்றுக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் (01.01.2026– 31.12.2026) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 456,000.00 | 4,600.00 | 2,000.00 |
| 02 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1,572,000.00 | 15,720.00 | 2,000.00 |
| 03 | மாட்டிறைச்சிக் கடை இல : 02 | 1,572,000.00 | 15,720.00 | 2,000.00 |
| 04 | கோழி இறைச்சிக் கடை இல : 02 | 1,810,000.00 | 18,100.00 | 2,000.00 |
| 05 | பேருந்து தரிப்பிட விளம்பரப்பலகை காட்சிப்படுத்தல் ( 15x4 ) | 26,950.00 | 500.00 | 2,000.00 |

குறிப்பு :- இந்நகராட்சி மன்றத்தின் இறைச்சிக்கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் இறைச்சி, என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தவிசாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி
2025.11.26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

மண்ணக வாழ்வு 29 . 03 . 1942



விண்ணக வாழ்வு 24 . 11 . 2025

### வைத்தியர் சபாநாதன் மரினா ஜோய்

உடுவிலை பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியர் சபாநாதன் மரினா ஜோய் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2025) திங்கட்கிழமை இறைவன் பாதம் சென்றடைந்துள்ளார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி பத்திநாதான் (உடுவில்) அவர்களுடைய அன்பு மகளும், திரு. சபாநாதன் அவர்களுடைய அன்பு மனைவியும், அஞ்சலா, சிந்தா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மத்தியு, வட்சன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியும், காய், மாயா, சக் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், ஜோசபின், ஜோசப் காலஞ்சென்ற ஜோன், காலஞ்சென்ற அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் மற்றும் ஜெசி மாகிரட், ஜனற் ஜெபம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாநிதி ஞானராஜா, காலஞ்சென்ற அன்ரநெற் மற்றும் றஞ்சி, ரவீந்திரன், விஜேந்திரன், சாந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அமிர்தாவீதி, நாவற்குழியில் அமைந்துள்ள அவருடைய இல்லத்தில் நாளை (27.11.2025) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை மறுதினம் (28.11.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, அங்கு பிற்பகல் 02.00 மணியளவில் இறுதி பிரியாவிடைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**கணவன், பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்



## திருமதி பிலோமினா பாலேந்திரன் (பிறேமா)

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பிலோமினா பாலேந்திரன் (பிறேமா) அவர்கள் நேற்று (25.11.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சொர்ணம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான யோசப் - றெஜினா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற பாலேந்திரன் (போமன் புனித வளன் கத்தோலிக்க அச்சகம்) அவர்களின் அன்பு மனைவியும், பபிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் மாகாணக் கல்வித்திணைக்களம் - யாழ்ப்பாணம்), அவர்களின் பாசமிகு தாயாரும், டெஸ்மன் (பாபு தனியார் நிறுவனம்) அவர்களின் மாமியாரும், காலஞ்சென்ற சறோவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மங்களதாஸ், ஞானேந்திரன், ஞானேஸ்வரி, மகேந்திரன் மற்றும் றூபி (கனடா), விக்கினேஸ் ஆகியோரின் மைத்துனியும், றஜிதா சர்வேஸ்வரன் (ஆசிரியை யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), நேருஷா லியோன் (ஆசிரியை யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்) மற்றும் காலஞ்சென்ற குயிலினி ஆகியோரின் பெரிய தாயாரும், சுபேனா (யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கார்த்திகன் (புனித பத்திரிசியார் கல்லூரி), மரிய ஜோஷிதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைக்காக நாளை (27.11.2025) வியாழக்கிழமை காலை 09:00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

32/18 அச்சக ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 128 4987

# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 11 . 1946



மறைவு
23 . 11 . 2025

## கோபால கிருஸ்ணன் கனகரஞ்சிதம்

பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலகிருஷ்ணன் கனகரஞ்சிதம் கடந்த 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கோபாலகிருஸ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், யோகலிங்கம் (ரவி) (வலிகாமம் கிழக்கு பல நோக்கு கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்), கணேஷ்குமார் (கனடா), சுகந்தினி, ஜோதினி, சசிகுமார் (லண்டன்), கிருஸ்ணகுமார் (குமார் பந்தல்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோபனா, சுயாதா, தணீஸ்வரன், மீரா, மனோஜா ஆகியோரின் அன்பு மாமியும், நிவேதிகா, கபிஷ்னா, ஷாய்சரண், அஜந்தன், தர்சனா, சந்தோஷ், மிமிஷா, றிஷ்வா, அம்சவி, அஷ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினராஜா, சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சிறிகந்தகுமார் ஆகியோரின் மைத்துனியும், துஷ்யந்தன், கமலதாசன், தர்சினி, சஜீபன் ஆகியோரின் பெரியம்மாவும், பிரதீபா, மதுரா ஆகியோரின் அத்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பகல் 12.00 மணியளவில் தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 30804) A

# மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 04 . 1938



மறைவு
22 . 11 . 2025

## நாகலிங்கம் சோதிநாதன்

(கிளிநொச்சி மண்ணின் மூத்த குடிமகன், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர்,
கிளிநொச்சி கொத்தணி பாடசாலைகளின் முன்னாள் அதிபர்,
முன்னாள் பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர்)

ஆலங்குழாய் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், கனகபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சோதிநாதன் அவர்கள் கடந்த (22.11.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கதிராத்தை தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் விமலா ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற சின்னக்குட்டி பாக்கியத்தின் (முன்னாள் ஆசிரியர்) அன்புக்கணவரும், கலாநிதி, தயாநிதி, கபிலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தன், பிரதாபன், சிவஞானம், அபிராமி ஆகியோரின் அன்பு மாமனாரும், குமரேசன், தாரணி, சுமுகன், மேதினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
0065 906 89924, 076 362 4021

இல. 08, 2ம் குறுக்குத்தெரு,
கனகபுரம், கிளிநொச்சி.

(CR/46580) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 06 . 1976



மறைவு
23 . 11 . 2025

## சிவலிங்கம் சிவதரன்

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சங்கானைப் பிரதேச செயலகம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவதரன் அவர்கள் கடந்த (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - லோகாம்பிகை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற இராமநாதி மற்றும் தவமணி தம்பதியரின் மருமகனும், தவச்செல்வியின் அன்புக் கணவரும், லக்ஷிக்கா, தர்சிக்கா, தரணிக்கா, யனகன் மற்றும் சன்விகா (யா/ யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரனின் (சேய்) அன்புச் சகோதரனும், ஹரிசனின் (யா/யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2025) வியாழக்கிழமை வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் காலை 07:00 மணியளவில் ஆரம்பமாகி பின்னர் அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/30506) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காற்றழுத்தம்...

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:
இலங்கைக்குதென்கிழக்குதிசையிலும் தென்மேற்கு திசையிலும் நிலவிய காற்றுச்சுழற்சிகள் ஒருங்கிணைந்து காற்றமுத்தத் தாழ்வு நிலையாக மாற்றம் பெற்றுள்ளன. இது இலங்கையின் தென்பகுதியூடாக (அம்பாந்தோட்டைக்கு அண்மையாக) வடக்கு திசை நோக்கி நகரத் தொடங்கவுள்ளது. இந்தத் தாழமுக்கம் நாளை ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாகவும், நாளைமறுதினம்புயலாகவும் மாற்றம் பெறும்.
இலங்கையின்காலநிலைவரலாற்றில் இரண்டு காற்றுச் சுழற்சிகள் ஒன்றாகி தென் பகுதியூடாக ஊடறுத்து கிழக்கு மற்றும் வடக்கு மாகாணத்தை நோக்கி வருவது இதுவே முதல் முறையாகும். வங்காள விரிகுடாவின் வரலாற்றிலும் மேற்கு நோக்கி நகர்ந்த காற்றுச் சுழற்சி மீண்டும் கிழக்கு நோக்கி நகர்ந்து இன்னுமொரு காற்றுச் சுழற்சியுடன் இணைந்து பலமடைவதும் இதுவே முதல் முறை.
இதனால் நாடு முழுவதும் மிகக் கனமழையைப் பெறும் வாய்ப்புள்ளது. இந்தக் காற்றுச் சுழற்சியின் செல்வாக்கினுள் இலங்கைமுழுவதும் உள்ளடங்கியுள்ளது.
ஒரு தாழ்வுநிலை எந்த திசைநோக்கி நகர்கின்றதோ அந்த பகுதியே அதன் காற்றுக்குவிப்புமையமும் மழைவலயமும் ஆகும். அந்த வகையில் இந்த தாழமுக்கம் நகரும் போது இந்த காற்றுக் குவிப்பு மற்றும் மழை வலயத்தினுள் தென் மாகாணம், ஊவா மாகாணம், மிக முக்கியமாக கிழக்கு மாகாணம் வடக்கு மாகாணங்கள் அடங்குகின்றன. எனவே இன்று முதல் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்கு கன மழை கிடைக்கத் தொடங்கும். நாளை முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மிகக் கனமழையும், வேகமான காற்று வீசுகையும் நிகழும். இந்த நிலைமை எதிர்வரும் 29ஆம் திகதிவரை தொடரும்.
இந்த நாள்களில் அதாவது எதிர்வரும் 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் 350 மில்லிமீற்றருக்கு மேல் மழைக்குச் சாத்தியம் உள்ளது. ஏற்கனவே கிடைத்துள்ள மழையால் கிழக்கு மாகாணத்தின் கணிசமான பகுதிகள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. எனவே எதிர்வரும் நாள்களில் கிடைக்கும் கன மழையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் தீவிரமான வெள்ள நிகழ்வுகளை ஏற்படுத்தும்.
எதிர்வரும் நாள்கள் வானிலைரீதியாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு மிக நெருக்கடியான நாள்களாகும். ஆகவே பொதுமக்கள் இந்த எச்சரிக்கையை புறந்தள்ளாமல், போதுமான தயார்ப்படுத்தல் மற்றும் முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை கணிசமான அளவு தவிர்க்கலாம் - என்றுள்ளது. (அ-ம-26)

## தலைவர்....

தலைவரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை ஆலடி வீதியில் அவரது இல்லம் அமைந்துள்ள வளாகம் அந்தப் பகுதி இளைஞர்களால்துப்புரவுசெய்யப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அங்கு, இன்று காலை கேக் வெட்டிக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.
தமிழர்தாயகத்தின்இதரபகுதிகளிலும், புலம்பெயர்நாடுகளிலும்கூடதலைவர் பிரபாகரனின்பிறந்தநாளைக்கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
தேசியத் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கடந்த பல வருடங்களாக இராணுவத்தினர்மற்றும் புலனாய்வாளர்களது இறுக்கமான கண்காணிப்புக்குள்ளும், கெடுபிடிக்குள்ளும்கொண்டாடப்பட்ட நிலையில், இம்முறைஅச்சமின்றிமக்கள்கொண்டாட்டத்தில் ஈடுபடத் தயாராகின்றமையை நேற்று இரவு அவதானிக்க முடிந்தது. (அ-ம-100,26)

## மாசிச்சம்பலுக்குள்...

கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே மேற்படி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.
கொழும்பிலிருந்துமாசிச்சம்பல்போத்தல்களுக்குள் மறைத்துக் கடத்தப்பட்ட நிலையிலேயேமேற்படிபோதைமாத்திரைகள்மீட்கப்பட்டுள்ளன.
மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புபிரிவுபொலிஸாராலேயே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரிடம் இருந்தும் முறையே, 3 கிராம் மற்றும் 2 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. மேலதிகவிசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

## கரணவாய்...

இருவர்அம்பாறையில்வைத்துக்கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை டிசெம்பர் மாதம் முதலாம் திகதிவரை தடுப்பில்வைத்துவிசாரிக்கநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
வடமராட்சி கரணவாய் கூடாவளவுப் பகுதியில், பிரான்ஸிலிருந்து வந்த அதேபகுதியை சேர்ந்த ராஜகுலேந்திரன் பிரிந்தன் (வயது -29) என்பவர் கடந்த19ஆம்திகதிஅதிகாலைவீதியில் வைத்துக்கூரிய ஆயுதங்களால்குத்திப் படுகொலை செய்யப்பட்டார்.
குறித்த கொலைச்சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவு விசாரணை மேற்கொண்டு வந்தது.
இரகசிய கண்காணிப்பு கமரா பதிவுகளின் அடிப்படையில் காங்கேசன்துறைப் பிரிவு ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிநயநாதராஉள்ளிட்ட அதிகாரிகள் குழு, குற்றம் செய்துவிட்டு சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்ற சந்தேகநபர்களை அடையாளம் கண்டிருந்தது. இதற்கு அமையவே, நேற்றுமுன்தினம் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
சந்தேகநபர்களிடம் இருந்து 15 கிராம் 60மில்லிகிராம்ஐஸ்போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள்இருவரும்மேலதிகவிசாரணைகளுக்காகவிலியடி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதற்குத் தயாராக இருந்த நிலையிலேயே, அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சந்தேகநபர்களில்ஒருவருடையசகோதரன்பிரான்ஸில்வசித்து வருகின்றார். அவருக்கும், கொலைசெய்யப்பட்ட இளைஞருக்கும்இடையில்கொடுக்கல் வாங்கல்இருந்துள்ளது. இதன்காரணமாகவேகொலைச்சதித்திட்டம்வகுக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது. அவராலேயே இந்தக் கொலைத் திட்டத்தில் மற்றைய சந்தேகநபர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். இருவரும் 17ஆம்திகதியாழ்ப்பாணத்துக்குவந்து அங்குள்ள இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.
சம்பவ தினமான 19ஆம் திகதி குறித்த இளைஞரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வெளிநாட்டில் இருந்துபொதியொன்றுவந்திருப்பதாக கூறி அதனை பெற்றுச்செல்லுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போதே வீட்டில் இருந்து வெளியேறிய இளைஞரை வழிமறித்து கிறிஸ் கத்தி மூலம் குத்தி படுகொலை செய்துள்ளனர். கொலை சம்பவத்தை முடித்து அம்பாறைக்கு தப்பிச்செல்லும் போது கொலைச்சம்பவத்தின்போது பயன்படுத்திய கைத்தொலைபேசியை நீர்நிலை ஒன்றில் எறிந்துவிட்டுச் சென்றுள்ளனர்.
சந்தேகநபர்களிடம்இருந்துகொலைக்குப்பயன்படுத்தப்பட்டதாககருதப்படும் கிறிஸ் கத்தி மற்றும் கொலை செய்யப்பட்ட இளைஞரிடம்இருந்துஅபகரிக்கப்பட்டதங்கச்சங்கிலிஎன்பனகைப்பற்றப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-100,26,66,20)

## அசாதாரண....

யாழ்ப்பாணத்தில் நிலவும் அசாதாரண காலநிலைகாரணமாக, சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகள் பகுதியளவில்சேதமடைந்துள்ளன.
சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் மின்னல்தாக்கம்மற்றும்வெள்ள இடர் காரணமாக4குடும்பங்களைச்சேர்ந்த 16 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும்பகுதியளவில்சேதமடைந்துள்ளது.
ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் பிரிவில் கடும் காற்று காரணமாக மூன்று குடும்பங்களைசேர்ந்த7பேர்பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
யாழ்ப்பாணம்பிரதேசசெயலர்பிரிவில் வெள்ள அனர்த்தம் காரணமாக 29 குடும்பங்களைச்சேர்ந்த98பேர்பாதிக்கப்பட்டுள்ளனர். வேலணை பிரதேச செயலர் பிரிவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
சாவகச்சேரி பிரதேசசெயலர் பிரிவில் 123குடும்பங்களைச்சேர்ந்த385பேர் வெள்ளம்மற்றும்மின்னல்அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளது. காரைநகர் பிரதேசசெயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ம-27)

## முதியவர்...

இதையடுத்து, அந்தப்பெண்தனதுதந்தையின் வீட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார்.
மருமகனின் தாக்குதலில் இருந்து மகளைப்பாதுகாப்பதற்குமுற்பட்டபோதே, அந்த முதியவர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். இதையடுத்து, 25வயதுடைய குறித்த மருமகனும், அவருக்கு உடந்தையாகச்செயற்பட்ட பிறிதொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113)

## காதலன்...

யும் காதலித்து வந்த நிலையில், இருவருக்கும் திருமணத்துக்கான நாள் நிச்சயிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, குறித்தகாதலி அண்மையநாள்களாக காதலனின் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார்.
கடந்த 5ஆம் திகதி காதலனின் தாயுடைய தாலிக்கொடி உட்பட 8 பவுண் நகைகள்காணாமற்போயுள்ளன. இது தொடர்பில்காதலனின்தாயாரால்சாவகச்சேரிபொலிஸ்நிலையத்தில்முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த யுவதி மீது சந்தேகமடைந்து அவரை விசாரணை வளையத்துக்குள் கொண்டு வந்துள்ளனர்.
பொலிஸாரின்விசாரணைகளில்நகைகளைத் திருடிய விடயத்தை யுவதி ஏற்றுக் கொண்டுள்ளார். சாவகச்சேரியில் உள்ளதனியார்நிதிநிறுவனத்தில்நகைகளை அடகு வைத்ததாகவும் யுவதி கூறியுள்ளார். அவருக்குஎதிரானமேலதிகசட்ட நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-28,26)

## இலங்கை...

கலந்துரையாடலின்பின்னர், ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்ததாவது:
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தத்தயாராகிவருகின்றது. ஆசிரியர் சங்கத்தினர் உட்பட எவருடனும் கலந்துரையாடாமல் மிகவும் தன்னிச்சையாக வகையிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், பாடசாலைகளின் நேரத்தை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள நகர்வுகளும் மிகத்தவறானவை. எனவே, இவற்றைக் கண்டித்து, டிசெம்பர்மாதம்12ஆம்திகதிநாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப்போராட்டத்திலீடுபடவுள்ளோம் - என்றார். (அ-ம)

## மாவீரர்....

துள்ளனர். பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்றபோது, ஒலிபெருக்கிச் சாதனங்களைக் கைவிட்டு அவர்கள் தப்பியோடியுள்ளனர். இதையடுத்து, அந்த ஒலிபெருக்கிச் சாதனங்களைக் கைப்பற்றிய பொலிஸார், சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவில் பண்ணையில் தங்கியிருந்து குடும்பமாக வேலை செய்யக் கூடிய வேலையாட்கள் தேவை.
சம்பளம் :- தனிநபர் - Rs.60,000/=
குடும்பமாக - Rs.90,000/=
தங்குமிடம் வழங்கப்படும்.
வேலை 9 மணித்தியாலயம் மட்டுமே.
தொடர்பு:
077 556 5876/ +49 1521 6762267


# வடக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்திய நிதியைப் பயன்படுத்துக

*சத்தியலிங்கம் எம்.பி. வலியுறுத்து*

**கொழும்பு, நவ.26**

**பலாலி விமானநிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தியா வழங்கவுள்ள நன்கொடையை இதற்காகப் பயன்படுத்தவேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு -செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை உற்பத்திப் பொருளாதாரத்தில் தன்னிறைவடைய வேண்டும். அவ்வாறு அடைந்தால் ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை உருவாகும். இதற்கு தொழிற்பயிற்சி என்பது மிக முக்கியமாகும். எனினும், வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தொழிற்பயிற்சியென்பது இல்லாத நிலை காணப்படுகின்றது. எனவே, தொழிற்பயிற்சி மையங்களை அமைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். முதலீட்டுக்குச் சாதகமான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும். முதலீட்டுவலயங்களை உருவாக்கவேண்டும். உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டுமானால் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். எனவே, பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம், தலைமன்னார் துறைமுகம் என்பவற்றை அரசாங்கம் அபிவிருத்தி செய்யவேண்டும். இந்தியா நன்கொடையாக வழங்கவுள்ள 20 ஆயிரம் மில்லியன் ரூபாவை இதற்காக பயன்படுத்தவேண்டும்-என்றார். (எ-44)


## மரண அறிவித்தல்



பிறப்பு 27 - 04 - 1989
இறப்பு 24 - 11 - 2025

### திருமதி ஜனனி கஸேந்திரன்

யாழ்ப்பாணம் ஓடை ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், இல.74, சிவலிங்கப்புளியடி வண்ணார்பண்ணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. ஜனனி கஸேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் 24.11.2025 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் மகேந்திரன் பத்மாசனி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) தம்பதியரின் ஆருயிர்ப் புதல்வியும், கஸேந்திரனின் மனைவியும், லதுராமி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), அபிராமி (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சங்கீதா (முன்னாள் முகாமைத்துவ உதவியாளர், யாழ். திறந்த பல்கலைக்கழகம்), கல்யாணி (பிரான்ஸ்), நளாயினி (சதுரங்கப் பயிற்றுவிப்பாளர்), விக்னேஸ்வரன் (முகாமைத்துவ உதவியாளர், நிதிக்கிளை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவரூபன் (முகாமையாளர், ஜனசக்தி இன்சூரன்ஸ்), புஷ்பகாந்தன் (பிரான்ஸ்), கோகுலன் (தகவல் தொழிநுட்பவியலாளர் - A.M.T Marketing & Distributors) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவசங்கர், சிவப்பிரியன், சமீரா ஆகியோரின் அன்புச் சித்தியும், ஆஷிகா, மாயோன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.74, ஓட்டுமடம் வீதி,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 833 6848
077 020 7956

(CS 59996) A




# மாவீரர் திருவுருவப்படங்களுடன் முல்லையில் மண்டபம் திறப்பு!

முல்லைத்தீவு,நவ.26

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பேருந்து நிலைய வளாகத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட பந்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்த மாவீரர்களின் விபரங்கள் அடங்கிய படங்கள் வைக்கப்பட்ட மண்டபம் மக்கள் அஞ்சலிக்காக அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த மாவீரர் மண்டபம் திறந்துவைக்கப்பட்டது.

மூன்று மாவீரர்களின் தாயார் நாடா வெட்டித் திறந்துவைத்ததைத் தொடர்ந்து மாவீரர்களின் பொதுக்கல்லறைக்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து தொடர்ந்து காட்சிப்படுத்தப்பட்ட மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கு உறவினர்கள், பொதுமக்கள், பெற்றோர் ஆகியோர் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினார்கள். (ச-19)





'ஒரு துளி உயிர்காக்கும் உயிர்காப்பதே மாவீரம்!'

இடம் : உதயன் பணிமனை
நேரம் : காலை 9 - பி.ப. 3 மணிவரை



## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

பூவரசங்குளம், வவுனியாவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
077 120 9998

(CS46581) J-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org